உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**மெயில் புக்**

மலர்-5 இதழ்-145

செப்டம்பர் 1-15, 2022




விருப்ப சந்தா இதழ்

**பணம், பதவி, அரசு அனைத்தும் காலனிக்கு சமம்**

# பாதுகைக்கு பட்டாபிஷேகம் செய்து ராமனுக்கு மேலானவனான பரதன்

# வெள்ளிக்கிழமைகளில் இதைச் செய்யுங்கள்!

# பணக் கஷ்டம் எளிதாக தீரும்

**உங்களுக்கு இருக்கின்ற கஷ்டம் இருந்த இடம் தெரியாமல் போக வேண்டும் என்றால், வெள்ளிக்கிழமைகளில் இதை தொடர்ந்து செய்து வாருங்கள்.**

செல்வத்திற்கு உரிய மகாலட்சுமியைத் தொடர்ந்து 24 வெள்ளிக்கிழமைகள் வழிபட்டு வந்தால் வீட்டில் செல்வ வளம் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் பெருமாள் கோவிலில் உள்ள தாயாருக்கு அபிஷேகத்திற்குத் தேவையான பசும்பாலை வழங்கினால் பண வரவு உண்டாகும். பச்சை வளையலைத் தாயாருக்கு அணிவித்திட செல்வம் பெருகும்.

சுக்கிர ஓரையில் மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி செந்தாமரை இதழ் கொண்டு அர்ச்சிக்க தனலாபம் கிடைக்கும். இதை வெள்ளிக்கிழமைகளில் செய்ய வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் அரசமரத்தடி விநாயகருக்கு அகலில் 11 தீபம் ஏற்றி, 11 முறை வலம் வந்து வழிபட்டால் பணவரவு நிரந்தரமாகும். மேலும், மாலை நேரத்தில் பசுவிற்கு உணவளிக்கச் செல்வம் சேரும்.

தினந்தோறும் உங்களின் குல தெய்வத்தை காலையில் பிரார்த்தனை செய்து வர வீட்டில் பண வரவு அதிகரிக்கும்.

வியாழக்கிழமை மாலை 4 முதல் 5 மணி வரை உள்ள நேரம் குபேர காலமாகும். அதனால் இந்நேரத்தில் இல்லத்தில் குபேரனை வழிபட்டு வர பண வரவு அதிகரிக்கும்.

தாமரை திரி போட்டுக் குபேரனுக்கு விளக்கேற்றி வழிபட்டால் பண வரவு அதிகரிக்கும்.

அமாவாசையில் நம் முன்னோர்கள் இறந்த திதியில் தானம் செய்திட தனலாபம் உண்டாகும்.

வீட்டில் திருப்பதி வெங்கடாஜலபதியுடன் பத்மாவதி தாயார் உள்ள படத்தை வைத்து வழிபட்டு வந்தால் பண வரவு அதிகமாகும்.



சுத்தமான நீரில் வாசனைத் திரவியம் கலந்து இருவேளைகளிலும் லட்சுமி மந்திரம் கூறியபடி வீடு முழுவதும் தெளித்திட செல்வம் சேரும்.

கனகதாரா தோத்திரம் ஸ்ரீசுக்தம் படிப்பதன் மூலமும், அவரவர் நட்சத்திர மூலிகையை பணப்பெட்டியில் வைப்பதன் மூலமும் பண வரவுக் கூடும்.

ஓடும் வெள்ளைக்குதிரை, ஜோடி கழுதைப் படம் ஆகியவற்றை அடிக்கடி பார்த்து வர பண வரவு அதிகமாகும்.

வீட்டில் வெள்ளை புறாக்களை வளர்த்தால் பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆந்தையை வழிபட்டால் பண வரவு உண்டாகும் மற்றும் ஆந்தை படத்தினை தொடர்ந்து பார்த்து வந்தால் செல்வ வளம் அதிகரிக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமியன்று சத்தியநாராயண பூஜை செய்து வந்தால் செல்வங்கள் பெருகும்.

# செப்டம்பர் மாதத்தில் சங்கரன் கோவிலில் வழிபாடு செய்யும் சூரியபகவான்



தமிழகத்தில் பெரும்பாலான கோவில்களில் ஒருசில குறிப்பிட்ட மாதங்களில் சூரிய கதிர்கள் கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் மீது பட்டு, சிவனை வழிபடுவதாக ஐதிகம் உள்ளது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் களக்காடு கோவில், ஞாயிறு கோவில் இன்னும் பிற கோவில்களை உதாரணமாகக் கூறலாம்.

அந்த வகையில் சங்கரன் கோவிலில் உள்ள சங்கரலிங்கப் பெருமாள் கோவிலில் வருடந்தோறும் செப்டம்பர் மற்றும் மார்ச் மாதங்களில் 21, 22, 23 தேதிகளில், பக்தர்கள் சென்று சிவபெருமானை வழிபடும் வழியிலேயே, சூரியக் கதிர்களும் சென்று, லிங்கத்தின் வலப்புறமாக விழத்துவங்கி சிறிது சிறிதாக நகர்ந்து சிவலிங்கத் திருமேனி முழுவதும் வியாபிக்கும். சிலசமயம் நான்கு நாட்கள் கூட சூரியக் கதிர்கள் சிவலிங்கத்தின் மீது விழும்.

இவ்வாறு பக்தர்களுடன் பக்தனாகவே சென்று சிவ வழிபாட்டை சூரியபகவான் செய்வதாக இவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பிரதோஷ நேரம் சிவனுக்கு மட்டுமல்ல விஷ்ணுவுக்கும் ஏற்ற காலம்



மகாவிஷ்ணுவின் அவதாரங்களில், பிரதோஷத்துக்கு தொடர்பு கொண்ட அவதாரமாக திகழ்வது ஸ்ரீநரசிம்ம அவதாரம். காலையும் இல்லாமல், இரவும் இல்லாமல் இருக்கும் நேரத்தில்தான் நரசிம்ம அவதாரம் நிகழ்ந்தது. மனித உருவாகவும் இல்லாமல், மிருக உருவாகவும் இல்லாமல், மனித உடலும் சிங்க முகமும் கொண்டு நரசிம்ம அவதாரம் நிகழ்ந்தது என்கிறது புராணம்.

அப்படி சில மணித்துளிகளில் நிகழ்ந்த அவதாரம் ஒரு பிரதோஷத்தில், பிரதோஷ வேளையில் நிகழ்ந்தது என்கிறது புராணம்.

எனவே, பிரதோஷம் என்பது சிவனுக்கு முக்கியமான பூஜைக்கு உரிய நாள் என்பது போலவே, நரசிம்ம மூர்த்திக்கும் முக்கியமான நாள். ஆகவே, பிரதோஷத்தின் போது சிவாலயங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுவது போல, நரசிம்மருக்கும் பூஜைகள் நடைபெறும். நரசிம்மரை பிரதோஷத்தன்று தரிசிப்பது இன்னும் மகத்தான பலன்களைத் தரும்.

# அவசரமாக செய்யும் தியானத்தின் சுவை தெரியாது



அவசரம் என்றால், தியானத்தின் சுவையை நீங்கள் அறியவே முடியாது. தியானத்தின் சுவைக்கு மிகுந்த பொறுமை, எல்லையற்ற பொறுமை தேவை. தியானம் எளிதானதுதான். ஆனால் நீங்கள்தான் அதை மிகவும் சிக்கலானதாகிவிட்டீர்கள். நீங்கள் ஓய்வெடுக்கும் சிறிது நேரத்தை எடுத்துக்கொள்வது மட்டும் தியானம் அல்ல. உங்கள் சிக்கலான மனம் ஓய்வெடுக்க சிறிது நேரம் எடுக்கும். இந்த மனம் ஒரு ஓய்வு நிலைக்கு, ஒரு தளர்வான நிலைக்கு மெல்ல கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு அது சிறிது நேரம் எடுக்கும்.

– ஓஷோ

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# எத்தனை பிரதோஷம் பார்த்தால் என்ன பலன்



மனிதர்கள் தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களை எண்ணி வருந்தும் காலத்தில், அப்பாவத்தை செய்த மனிதர்களின் பாவங்களின் வீரியத்தை குறைக்க சிவபெருமானின் திருவிளையாடலால் உருவானதுதான் பிரதோஷம்.

திருப்பாற்கடலில் உருவான ஆலகால விஷத்தை உண்டு அகிலத்தை காத்த ஈசன், விஷத்தின் வீரியத்தால், சுருட்டபள்ளி என்ற இடத்தில் அம்பாளின் மடியில் மயக்க நிலையில் இருந்து மீண்டபொழுது, தன்னைக் காண காத்திருந்த தேவர்கள், அசுரர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து நந்தியம்பெருமானின் இரண்டு



கொம்புகளுக்கு நடுவில் நின்று ஆனந்த தாண்டவம் ஆடிய வேளையையே பிரதோஷ காலமாக வரையறுத்துள்ளனர்.

இப்படி ஈசனால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதோஷம், ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை திரயோதசி தினங்களில் மாலை 4.30 முதல் 6 மணிவரை உள்ள காலத்தில் வரும்.

இந்த பிரதோஷ வேளையில் தேவர்கள் அனைவரும், பூமியில் அமைந்துள்ள சிவன் கோவிலுக்கு வந்து பூஜிப்பதாக ஐதீகம், அதனால்தான், இந்த நேரத்தில் மனிதர்களாகிய நாமும் சிவன் கோவிலில் நடைபெறும் பூஜையில் பங்கேற்றால், தேவர்களுடன் இணைந்து பூஜை செய்த பலன் கிடைக்கும்.

இந்தவகையில் பிரதோஷத்தில் தொடர்ந்து கலந்து கொண்டு ஈசனின் அபிஷேக ஆராதனைகளைப் பார்த்துவந்தால், பிரம்மஹத்தி தோஷம் கூட விலகிச் செல்லும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

அந்தவகையில், பிரதோஷ நிகழ்வை எத்தனை முறை பார்த்தால் என்னென்ன பலன்கள் ஏற்படும் என்பதை விரிவாக பார்ப்போம்.

## எத்தனை பிரதோஷத்தை பார்த்தால் என்ன பலன்கள் கிடைக்கும்

| | |
|---|---|
| 3 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் பிரம்மா. விஷ்ணு, சிவன் முதல் மூன்று தெய்வங்களும் பார்ப்பதற்கு சமம். |
| 5 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் உடலில் உள்ள அனைத்து நோய்களும் நீங்கும். |
| 7 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். |
| 11 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் உடலும், மனமும் வலிமை பெற்று புது தெம்பு கூடும். |
| 13 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் நினைத்த காரியம் தங்கு தடையின்றி நடைபெறும். |
| 21 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும். |
| 33 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் சிவன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் கிடைக்கும். |
| 77 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் ஒரு ருத்ர யாகம் செய்த பலன் கிடைக்கும். |
| 108 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் ஒரு தேவேந்திர பூஜை நடத்தியதற்கு சமம். |
| 121 | பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் அடுத்த ஜென்மம் கிடையாது. |

விருப்ப சந்தா
செலுத்த
இங்கே ஸ்கேன்
செய்யுங்கள்

## பிரச்சனைமேல் பிரச்சனையா?

# ஊமத்தங்காய் விளக்கேற்றி நற்பலன் பெறுங்கள்



சிலருக்கு வீட்டில் மளிகை பொருட்களை கூட வாங்குவதற்கு வழி இல்லாமல் இருக்கும். கோவிலுக்கு செல்லவேண்டும் என்றாலும் பூஜை பொருட்கள் வாங்குவதற்கு வழி இல்லை. கை யில் சுத்தமாக பணம் இல்லை. கடன் தொல்லை, இப்படியாக நிறைய வீடுகளில் இன்றளவும் கஷ்டம் இருந்து கொண்டுதான் வருகிறது. இப்படிப்பட்ட பிரச்சனையில் வாடி கொண்டிருப்பவர்கள் இந்த தீபத்தை ஏற்றினால் மூன்றே வாரங்களில் நல்ல பலனை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

நம்முடைய வீட்டில் இருக்கும் வறட்சியை நீக்கி, வீட்டை குளிர வைக்க கூடிய தன்மை ஊமத் தங்காய்க்கு உள்ளது. குளிர்ச்சி நிறைந்த இந்த ஊமத்தங்காயை தோட்டத்திலிருந்து உங்களால் பறித்து வர முடிந்தால் பறித்து வரலாம். அப்படி இல்லை என்றால் நாட்டு மருந்து கடைகளில் சொல்லி வைத்து வாங்கிக் கொள்ளலாம்.

இரண்டு ஊமத்தங்காய்களை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். அதன் காம்புகளை நீக்கி விட்டு சிறிய துளை போட்டுக் கொண்டு அதன் உள்ளே இருக்கும் விதைகளை நீக்கி விட வேண்டும்.

உள்ளே கொஞ்சம் வெண்கடுகு போட்டு அதன் பின்பு, ஒரு சிறிய மண் அகல் விளக்கின் மேல் அந்த உமத்தங்காய்களை வைத்து அதன் உள்ளே இலுப்பை எண்ணெய் மட்டுமே ஊற்றி பஞ்சு திரி போட்டு பூஜை அறையில் தீபம் ஏற்றிவைத்துவிட்டு குலதெய்வத்தை மனதார வேண்டிக் கொள்ள வேண்டும். சிவபெருமானை நினைத்து வேண்டிக் கொண்டாலும் சரிதான். அந்த நிமிடமே உங்கள் வீட்டில் இருக்கும் வறட்சி தன்மையானது நீங்க தொடங்கிவிடும்.

ஊமத்தங்காய்களின் நிற்க வைக்க அடியில் மண் அகல் தீபங்களை வைக்கிறீர்கள் அல்லவா, அந்த மண் அகல் தீபத்திற்கு பதிலாக கொஞ்சம் பசும் சாணத்தை கொண்டு வந்து, அதன் மேல் இந்த ஊமத்தங்காய் தீபத்தை ஏற்றுவது நம்முடைய வீட்டிற்கு மேலும் நல்லதை கொடுக்கும். முடிந்தவர்கள் பசுஞ்சாணத்தில் மேலும் இந்த தீபத்தை ஏற்றலாம். இந்த தீபத்தை குறிப்பாக எந்த கிழமையில் எந்த நேரத்தில் ஏற்றுவது?

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேல் 6.00 மணிக்குள் இந்த தீபத்தை வீட்டில் ஏற்றினால் உங்களுடைய கஷ்டங்கள் தீரும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதோடு மட்டுமல்லாமல் உங்கள் வீட்டை பிடித்திருக்கும் திருஷ்டி எதிர்மறை ஆற்றலையும் விரட்டி அடிக்க கூடிய சக்தி இந்த தீபத்திற்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது

9 செவ்வாய் அல்லது 9 வெள்ளிக்கிழமை விளக்கு ஏற்றுங்கள் அல்லது தொடர்ந்து9 ஞாயிற் றுக்கிழமை இந்த தீபத்தை ஏற்றி விடுங்கள்.

. அதன் பின்பு உங்களுக்கு மனரீதியாக உங்களுடைய வீட்டில் மாறுதல்கள் ஏற்படுவதாக உணர்ந்தால், தொடர்ந்து அடுத்து வரக்கூடிய ஞாயிற்றுக்கிழமைகளிலும் இந்த தீபத்தை ஏற்றுவதால் தவறொன்றும் கிடையாது. வீட்டை பிடித்த பீடை நீங்கி, வீட்டில் சுபிட்சம் நிலவ இது ஒரு சுலபமான ஆன்மீக ரீதியான வழிபாடு என்பது குறிப்பிடத்தக்கது.



# முனீஸ்வரர்

முனீஸ்வரன் ஈசன் அம்சமாக கருதப்படுவர் ஆவார். முனிவர்களுக்கு எல்லாம் ஈஸ்வரனாக இருந்து ஞானத்தை வழங்கியவன் என பொருள்படும்

மேலும் முனீஸ்வரன் வழிபாடு என்பது இன்று நேற்று அல்ல பண்டைய காலத்தில் இருந்தே தொடர்ந்து கொண்டு இருக்கிறது கிராம காவல் தெய்வமாக மக்கள் வழிபாடு செய்கின்றனர்.

கிராம மக்கள் முனி, முனியாண்டி, முனியப்பனி, முனியப்பர் எனவும் அழைத்து வழிபடுகின்றனர்

முனி என்றால் "ரிக் வேதத்தில்" "தெய்வ ஆவேசம் படைத்தவர்" என்றும், பயமற்றவர் என்றும் பொருள், நாட்டார் தெய்வங்களில் முனி என்பது காவல் தெய்வத்தின் பெயர்"பஞ்ச முனிகள்" அதாவது ஐந்து முனிகள், பச்சை அம்மனுக்கு காவலாக பூலோகம் வந்ததாக வரலாறு உண்டு.

சில இடங்களில் சப்த முனிகள் உண்டு. ஈஸ்வர பட்டம் பெற்றவர் முனீஸ்வரர் ஆவர்.

இந்த முனீஸ்வரன், சிவ அம்சம் கூடியவர்.

முன்னொரு காலத்தில் "அந்தகாசுரன்" என்னும் அசுரன் தேவர்களையும், மக்களை வதைத்து, இடையூறு செய்து வந்தான். அந்த அசுரனிடம் இருந்து தங்களை காக்கும்படி அன்னை பராசக்தியை அனைவரும் வேண்டினர்,

பார்வதி அம்மன் "காத்தாயி" என்ற பெயரில் பூமியில் அவதரித்து அசுரனை அழிக்க காத்தாயி அம்மன் லடாமுனி, முத்துமுனி, செம்முனி, கருமுனி, கும்பமுனி, வாழ்முனி, சட்டைமுனி, என்று ஏழு முனிகளை உருவாக்கி, அந்த ஏழு முனிகளும் சேர்ந்து அந்த நரகாசுரனை அடக்கி வதம் செய்தனர்,

பின்பு முனிகள் அனைவரும் ஒரே வடிவமாக மக்களை காக்க பூமிக்கு வந்தனர்.

பொதுவாக மக்களுக்கு முனீஸ்வரனை பற்றி நிறைய குழப்பங்களும் சந்தேகங்களும் உண்டு, இதில் உண்மை எது பொய் எது என்றும் குழப்பங்களும் உண்டு. ஆனால் உண்மை என்னவென்றால் நம்மை மற்றும் பூலோகம் உயிரினங்கள் புல் முதல் அண்டசராசரம் வரை படைத்த இறைவன் ஈஸ்வரன் ஆவான்.

பரமாத்மாவில் இருந்தே ஜீவாத்மா பிரிந்தது. அதுபோல் தான் முனீஸ்வரன் சாட்சாத் ஈஸ்வரனின் அம்சமே. கலியுகத்தில் அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்கவும் மக்களை காக்கவும்




வீர ஆவேசமாக அவதரித்தவரே "முனீஸ்வரன்".

முனீஸ்வரன் வழிபாடு என்பது நம்மை காக்கும், ஆண்டி முதல் அரசன் வரை பாகுபாடின்றி வழிபடும் தெய்வம் முனீஸ்வரன்.

கலியுகத்தில் ஏழை எளிய மக்கள் புரிந்துகொள்ளும் படியும் அவர்களுக்கு வழிபாடு செய்யகூடிய எளிய முறை உள்ள ஒரே வழிபாடு முனீஸ்வரன் வழிபாடு மட்டும் தான்.

எல்லா தரப்பு மக்களும் வழிபாடு செய்யவே கிராமங்கள் தோறும் சிறு ஆலயங்களிலும் முனிகள் வீற்றிருக்கின்றனர்.

சிவன், பெருமாள், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு, இவர் தான் காவலர் ஆவார்.

பெரிய ராஜகோபுரம் உள்ள கோவில்களிலும் முனீஸ்வரர்க்கு தனி சன்னதி உண்டு.உதாரணமாக ஸ்ரீரங்கம் திருதலத்தில் ராஜா கோபுரத்தில் முனீஸ்வரர் சன்னதி உள்ளது.

பல பெரிய தனி சன்னதிகளும் முனீஸ்வரன் காட்சி தருவதும் உண்டு.

இப்படி எல்லா இடங்களிலும் முனீஸ்வரன் வழிபாடு உண்டு.

இவர் கனல் வீசும் கண் உடையவர், அருள் ஒளிரும் மேனி உடையவர், சகல சௌபாக் கியமும் தருபவர், நள்ளிரவில் கண்ட நெடிய வெண்புகை வடிவத்தில் வலம்வருபவர் என்று பல நம்பிக்கைகள் உண்டு. "நம்பினார் கெடுவ தில்லை" என்ற வாக்கின் அடிப்படையில் நம்பி வழிபட்ட பலருக்கு முனீஸ்வரன் இப்படி காட்சி தந்த வரலாறுகள் நமது கிராமத்தில் பல்லாயிரக் கணக்கான கதைகள் உண்டு.

நமது நாட்டில் மட்டுமல்ல "பர்மா" என்று அழைக்கப்பட்ட தற்போதைய "மியான்மர்" என்ற நாட்டில் சுதந்திரத்திற்கு முன்பு பல லட்சம் தமிழர்கள் வசித்தனர். "ரங்கூன்" என்று அழைக்கப்பட்ட "யாங்கூன்" இருந்து சுமார் 1 மணி நேரப்பயணம் வருகிற ஊர் "பிலிக்கான்" அங்கே முனீஸ்வரர்க்கு அற்புதமான ஆலயம் உள்ளது.

நீதி, நியாயம் இவற்றை மக்களுக்கு வழங்கி வருவதால் இந்த தேசத்து மக்கள் இவரை"ஜட்க் ஐயா" என்றே அழைக்கிறார்கள்.

பர்மா மட்டுமல்ல மலேஷியா, சிங்கப்பூர் சீனா, ஜப்பானிலும் முனீஸ்வரன் வழிபாடு உள்ளது.

மலேசியாவில் மட்டும் 500 இக்கும் மேற்பட்ட முனீஸ்வரர் கோவில்கள் உள்ளன.


அழகுராஜா

## முனீஸ்வரன் மந்திரம்:

'ஓம் ஹும் ஜடா மகுடதராய
உக்ர ரூபாய துஷ்ட மர்தனாய
சத்ரு சம்ஹாரனாயஜடா
முனீஸ்வராய நமஹ.'

முனீஸ்வரன் காயத்ரி:

"ஓம் தத்புருஷாய வித்மஹே
மஹாவீராய தீமஹி
தந்நோ முனீஸ்வர ப்ரசோதயாத்"

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# விரைவில்....

நமது இதழில்

# ஆன்மிகமலர்கள்

பகுதி அறிமுகப்படுத்தவிருகிறோம்

| |
|---|
| ஆன்மிகத்தில் சேவை செய்யும் அன்பர்கள் |
| தொண்டுள்ளம் கொண்ட அன்பர்கள் |
| இயற்கை வைத்திய முறையை சிறப்பாக செய்யும் அன்பர்கள் |
| ஆன்மிக சேவை அன்பர்கள் |

**மேற்கண்ட அன்பர்களை நமது இதழின் வாயிலாக ஆன்மிக உலகத்திற்கு அறிமுகப்படுத்தவிருக்கிறோம்.**

மேலும் விபரங்களுக்க

**9444228203**

## பணம், பதவி, அரசு அனைத்தும் செருப்பிற்கு சமம்

# பாதுகைக்கு பட்டாபிஷேகம் செய்து ராமனுக்கு மேலானவனான பரதன்

தற்காலத்தில் பணம், சொத்து, பதவி போன்ற வற்றிற்காக எந்த நிலைக்கும் செல்ல மக்கள் தயங்குவதில்லை.

சொத்து ஆசையில் பெற்ற தாய், தந்தையரையே இழிவுப்படுத்தும் மகன், மகள்கள் பெருகியுள்ள காலத்தில், நிலம், பொன், பொருள் போன்றவற்றிற்காக கீழ்த்தரமான செயலை செய்யும் மக்கள் பெருகிவரும் வேலையில், இவை அனைத்தும் நிலையானது இல்லை என்பதை அவசியம் உணர வேண்டும்.

மேற்கண்ட பணம், பொன், பொருள், போன்ற வற்றை துச்சமாக மதித்து அன்பு, பாசம், பந்தம், இறைபக்தி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தந்த நமது புராணங்களை நமது சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்காததன் விளைவே மேற்கண்ட நிலைக்கு தற்போது நாம் வந்து நிற்கிறோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அக்காலத்தில் நமது புராணக்கதைகளை குழந்தைகளுக்கு சொல்லி வளர்த்தனர், வளர்ந்த பிள்ளைகளும் பண்புடன் வளர்ந்து வந்தனர். அதனால் அக்காலத்தில் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் இல்லை.

ஆனால் இன்று தெருவிற்கு ஒரு முதியோர் இல்லம், பெரும்பாலான வழக்குகள், "பிள்ளைகள் சொத்துக்காக அடிக்கிறார்கள், ஆபாசமாக திட்டுகிறார்கள்" என்று வயதான பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது, போன்ற சம்பவங்கள் அதிகரிக்கின்றன.

இந்து சமய பண்டிகையின் முக்கியத்துவத்தை பல்வேறு நீதிக்கதை, புராணக்கதையின் மூலம் அறிந்து வளர்ந்த பிள்ளைகள், இந்துமத பண்டிகையை மிகுந்த ஈடுபாட்டுடன் கொண் டாடினர், குடும்பம் சூழல் உறவுகள் சூழ தங்க ளுக்குள் அன்பை வளர்த்துக் கொண்டாடும் ஒரு இணைப்பு விழாவாகவே நமது இந்து மத விழாக் கள் திகழ்ந்தது.

ஆனால் இக்கால தலைமுறையினருக்கு இந்துமத பண்டிகையின் மகத்துவத்தை அறிந்து கொள்ள முடிவதில்லை, விடுமுறை தினமாகவே



நினைக்கின்றனர், மற்ற மத பண்டிகையின்போது மக்களை கெடுக்கும் குடி மையங்களான டாஸ்மாக் போன்றவற்றின் வருவாய் பெருகுவதில்லை, ஆனால் இந்து மத பண்டிகையின் போது மட்டுமே அக் குடி மையமான டாஸ்மாக் பல நூறு கோடி வருவாய் பெருகுகிறது.

இந்து மத பண்டிகையை டாஸ்மாக் வருவாய் தரும் தினமாக ஒவ்வொரு இந்து மக்களும் மாற்றி வைத்துள்ளனர்.

இந்த நிலை மாற வேண்டுமென்றால், ஒவ்வொரு பெற்றோரும், நமது இந்து மத விழாக்கள் குறித்தும், இந்துமத தெய்வங்கள் குறித்தும், அன்பு பாசம் போன்றவற்றின் மகத்துவத்தை எடுத்துக் கூறும் புராண இதிகாச கதைகளையும், நிகழ்வுகளையும் நமது சந்ததியினர் அறிந்து கொள்ளுமாறு அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

முக்கியமாக இன்றைய முக்கிய பிரச்சனையாக இருக்கும் குடும்ப உறவு சிதையலை போக்க வேண்டுமானால், இராமாயணம் மகாபாரதம் போன்றவற்றில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் மிகநுட்பமாக நமது சந்ததியினருக்கு எடுத்து சொல்லவேண்டும்.

குறிப்பாக ராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு சம்பவங்களும் தற்காலத்திற்கு ஒரு

படிப்பிணையை தருவதாக அமைந்துள்ளது.

அதில் ஒரு பகுதியில் பரதன் செய்யும் காரியம், ராமனைவிட உயர்ந்தவனாக உயர்த்தி காட்டுவதாக அமைந்துள்ளது. அதைப் பார்ப்போம்.

ராமாயணத்தில் பட்டாபிஷேகங்கள் பல நடைபெற்றுள்ளன. ஆனால் அவற்றுள் பரதன் நடத்திய பாதுகா பட்டாபிஷேகமும், ராவணனை வென்று திரும்பிய ராமபிரானுக்கு வசிஷ்டர் மணிமுடி சூட்டிய பட்டாபிஷேகமும் முக்கியமானவை.

இந்த இரண்டனுள் பரதனுக்கு ராமர் அளித்த மரவடிவிலான பாதுகை (காலனி)க்கு பரதன் நடத்திய பட்டாபிஷேகமே சிறந்தது.

பரதனின் பாதுகா பட்டாபிஷேகத்திற்கு "திருவடி சூட்டுப் படலம்' என்றும், ராமபிரானுக்கு மணி முடி சூட்டிய பட்டாபிஷேகத்திற்கு "திருமுடி சூட்டுப் படலம்' என்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெயரிட்டுள்ளார்.

தசரதர் தம் அருமை மகன் ராமனுக்குப் பட்டாபி ஷேகம் என்று அறிவித்தவுடன் மந்தரையின் போதனையால் மனம்மாறினாள் கைகேயி. ராமன் மீது தான் கொண்டிருந்த அன்பையும் மறந்து, சம்பராசுர யுத்தக் காலத்தில் தசரதன் வழங்கிய இரண்டு வரங்களில் ஒரு வரத்தால், "பரதனே நாடாள வேண்டும்' என்றும், மற்றொரு வரத்தால் "ராமன் தவக்கோலம் பூண்டு பதினான்கு ஆண்டுகள் கட்டில் வனவாசம் செல்ல வேண்டும்' என்றும் வரம் கேட்டாள்.

தசரதன் வரம் கொடுத்துவிட்டு, ராமன் பிரிவைத் தாங்க மாட்டாமல் மரண மூர்ச்சையடைந்து விட்டார்.

கைகேயி ராமனை அழைத்து வரச் செய்து, "பரதன் நாடாளவேண்டுமென்றும் நீ பதினான்கு ஆண்டுகள் காட்டில் வனவாசம் செல்ல வேண்டுமென்றும் தசரதன் ஆணையிட்டதாக'' கூறினாள்.

சிற்றன்னையின் சொல்லைக் கேட்டு சிறிதும் துயருறாமல், எதிர்த்து ஏதும் கேளாமல், அக் கணமே ராஜவாழ்வை துறந்து தவக்கோலம் பூண்டு தம்பியுடனும் சீதையுடனும் ராமன் காடு சென்றார்.

அப்போது கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத்தி வந்து, அண்ணன் ராமர் வனவாசம் சென்றதையறிந்து தாய் கைகேயி மேல் கோபம் கொண்டு இழித்தும் பழித்தும் பேசினான். "என் அண்ணன் ராமரை இப்பொழுதே அழைத்து வந்து மணி முடி சூட்டுவேன். அவர் வரமறுத்தால், அவர் பாதங்களிலேயே என் உயிர் போக்கிக் கொள்வேன்" என்று பரதன் காட்டிற்கு புறப்பட்டான்.

அவனுடன் குலகுரு வசிஷ்டரும், தாய்மார்கள் மூவரும், நால்வகைப் படைகளும், அயோத்தி மக்கள் அனைவரும் புறப்பட்டனர். பரதனுடன் வந்த அனைவரும் கங்கைக் கரைக்குச் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்தனர்.

கங்கைக் கரைத் தலைவனாகிய குகன், ராமர் மீது அளவில்லா அன்பு கொண்டவன். அதனால் பரதனும்,படைவீரர்களும்வருவதைப்பார்த்து,"ராமர்

ப தி னா ன் கு



ஆண்டுகள் வனத்தில் கழித்துவிட்டுப் பின் நாட்டிற்கு வந்து முடிசூடிக் கொள்வார். ஆதலால் இப்போதே அவரைப் போரிட்டுக் கொன்றுவிட வேண்டுமென்று நினைத்தே பரதன் படையுடன் வருகிறான்' என்று மனத்தினால் எண்ணி; பரதனுடன் போருக்கு ஆயத்தமானான்.



பரதன் படைகளுடன் கங்கைக் கரையை நெருங்கி வந்தான். அவன் தவக்கோலம் கண்டு அவன் மேல் அன்பு ததும்ப எதிர்நோக்கி வந்தான் குகன்.

ராமனின் தம்பி பரதனும், ராமனால் "தம்பி' என்றழைக்கப்பட்ட குகனும் ஒருவரை ஒருவர் வணங்கிக் கொண்டனர். அப்பொழுது குகன், "பரதா! நீ நாட்டை ஆளாமல் தவக்கோலம் பூண்டு வந்திருப்பது ஏன்?" என்று வினவினான்.

அதற்கு, "குகனே! இவ்வுலகமெல்லாம் ஆட்சி செய்துவந்த என்தந்தை தசரதர், நீதி முறைப்படி மூத்தவனுக்குத்தான் முடிசூட்ட வேண்டுமென்ற மரபை மாற்றி இளையவனான எனக்கு நாட்டைஆளும் பொறுப்பைத் தந்தார். என் தந்தையின் ஆணையை மாற்றி, அண்ணன் ராமரை அழைத்துச் சென்று முடிசூட்ட வேண்டும் என்று வந்தேன்" என்று பரதன் கூறினான்.

பரதன் கூறியதைக் கேட்ட குகன், ""பரதா! உன் தாய் கேட்ட வரத்தினால் உன் தந்தை கொடுத்த நாட்டை ஆளுதல் அறமோ, நீதியோ அல்ல என்று கருதி தவக்கோலம் பூண்டு வந்த உன் உயர்ந்த பண்பை நினைத்தால் ஆயிரம் ராமர்கள் சேர்ந்தாலும் உன் ஒருவனுக்கு ஈடாக மாட்டார்கள்" என்று வியந்து கூறினான்.

இதனை, "ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியினம்மா" என்று பாடியுள்ளார் கம்பர்...

இந்நிகழ்விற்கு பின் ராமனை சந்தித்த பரதன் நாடாள அழைப்பு விடுத்தும், தந்தையின் வாக்குப்படி ராமன் தன் வனவாசத்தில் பிடிவாதமாக இருந்தான்.

எவ்வளவு வற்புறுத்தியும் ராமன் நாடாள ஒப்புக் கொள்ளாததால்,ராமனின் மரப் பாதுகை (செருப்பை) பெற்று அதை சுமந்துக்கொண்டு தன்நாட்டிற்கு வந்த பரதன், அந்த பாதுகைக்கு பட்டாபிஷேகம்செய்து அரியணையில் அமர்த்தி அழகு பார்த்தான்.

பொன், பொருள், அரசாங்கம் கிடைத்தும் அதில் நாட்டம் செல்லாமல் ராமன் மீது வைத்த பாசமும், அன்பும் அவனை கோடி ராமனுக்கு ஈடானவனாக மாற்றியது.

பரதனின் இந்த பண்பு அயோத்தி மக்கள் ராமனுக்கு கொடுத்த மரியாதைவிட கோடி மடங்கு மரியாதையை பரதனுக்கு கொடுத்தனர்.



கீதா ராஜன்

அன்புக்கு உதாரணமான இந்நிகழ்வை இன்று நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பது மிக அவசியமாகும். பொன், பொருள், மண், பதவி தேவைதான் ஆனால் அதைவிட அன்பு, பாசம், மரியாதை, மானம் இவை மிக மிக முக்கியம்.

இனியாவது இதை உணர்த்தும் இதிகாச புராணக் கதைகளை நமது சந்ததிகளுக்கு சொல்லிக்கொடுக்க முனைவோம்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

தெரியாத, புரியாத,
ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக தொகுத்து
பாமரர்களும் புரிந்து கொள்ளும்
வகையில் நமது இதழில்
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
145 க்கும் மேற்பட்ட
இதழ்களை
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.




# கனவிலும் கூடக் காதல் ஒன்றே நினைப்பு



கன்னங்கரிய முகிலை விடவே கருப்ப்ப்ப்பு
கன்றுக்குட்டிகள் கூட்டம் நடுவே கிடப்பு
கள்ளும் வழியக் கன்னியர் முகமே சிரிப்பு
கடவுளும் சிறிய பாலகன் எனவே நடிப்பு

கடலைப் போல எந்த நாளுமே களிப்பு
கள்ளத்தனமே எதிலும் வளருமே நகைப்பு
கட்டிய உறியில் அண்டக் காற்றே இருப்பு
கண்ணில் தீட்டிய மையும் சற்றே வெளுப்பு

கரிய குயிலும் குழலின் முன்னே திகைப்பு
கழலில் ஓசை அடங்கா அணியே சிறப்பு
கண்ட போதில் தோகை மயிலே விரிப்பு
கனக சபையின் இறையும் அங்கே வசிப்பு

கணமும் உள்ளில் தீயின் நாவுமே வெடிப்பு
கட்டுக் கொண்டு மறைந்து விடவே தவிப்பு
கலவி தனிலே ஆவி அடையுமே சிலிர்ப்பு
கலியில் யாவும் அவனும் இன்றியே சலிப்பு

கருணை காட்டிக் காக்க ஏனோ மறுப்பு
கழலை மறுக்க உள்ளில் எழுமே கனைப்பு
கடந்து தீரும் கணமும் வெறுதே வெறுப்பு
கண்ணா எனக்கு உந்தன் நிழலே காப்பு.



– கவிஞர் பாபு,
தொலைபேசி எண்:
9447388699
திருவனந்தபுரம்

ஆன்மிகமலர் காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# வேலும் திருச்செந்தூரும்

## கடலில் ஒரு சந்தன மலை

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என சொல்கிறார்கள். திருச்செந்தூரில் குன்று எங்கே உள்ளது? கடல்தானே உள்ளது என்ற கேள்வி எழும்.

உண்மையில் திருச்செந்தூர் சந்தனமலை. சந்தனாசலம் என்று அதற்குப் பெயர்.

திருச்செந்தூர் கோவில் மூலஸ்தானம் குடவரை . மலையைக் குடைந்து செய்தது.

## முருகனுக்கு ஆலோசனை வழங்கிய குருபகவான்

திருச்செந்தூர் கோவிலின் மூலஸ்தான மூர்த்தியானஸ்ரீபாலசுப்பிரமணியருடன் சேர்ந்தே குருபகவானும் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளார்.

இங்கே குருபகவான் யந்திர ரூபமாகவும், காயத்ரீ மந்திர ரூபமாகவும், நித்யவாஸம் செய்து ஸ்ரீபாலசுப்பிரமணியரை வந்து தரிசிப்போரின் கஷ்டங்களை நீக்கி குரு அருள் புரிகிறார். திருச்செந்தூரில் முருகப்பெருமான் சூரபத்மனை வதம் செய்தபோது அவருக்கு அருகில் இருந்து ஆலோசனைகள் வழங்கி முருகனை வெற்றி வேலனாக்கியவர் குருபகவான்...!!

அதனால்தான் திருச்செந்தூர் முதன்மை குரு ஸ்தலமாக அறியப்படுகிறது.

ஜோதிடத்தில் குரு பகவானே புத்திரகாரகன் என்றும், தனகாரகன் என்றும் அறியப்படுகிறது.

புத்திர பாக்கியம், தனம் வேண்டுவோர் கண்டிப்பாக வழிபட வேண்டிய முதன்மை ஸ்தலம் திருச்செந்தூர் முருக பெருமான் தான்..!!

மூலவர் தரிசனம் செய்த பின்னர் மறக்காமல் கோவில் யானைக்கு கரும்பு வாங்கி தாருங்கள். குருவுக்கு உண்டான அருமையான பரிகாரம் இது..!!

சுய ஜாதகத்தில் குரு பகவான், நீசம், பகை, மறைவு ஸ்தானங்களில் இருப்பவர்கள் இங்கு வந்து முருகனை வழிபட கண்டிப்பாக குரு பகவான் அருள்கிட்டும்.

## வேல் பெரிதாக இருக்கலாமா?

முருகன் கையில் இருக்கும் வேல், முருகன் சிரத்தை விட உயர்ந்து காணப்படும் படங்களை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்பார்கள்.

இதற்கு காரணம் உள்ளது. முருகன் கையில் உள்ள வேல் காது வரை அமைந்திருக்க வேண்டும். ஆயுதம் இறைவனுக்கு அடங்கித்தான் இருக்க வேண்டும். என்பதால் முருகப்பெருமானைவிட வேல்சிறிதாகஇருக்கவேண்டும்என்று வரையறுத்துள்ளனர்.



ஆன்மிகமலர்

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உதவுங்கள்...

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 140 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



ஆன்மிகமலர்

**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்




## மேஷம்



குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். எதிலும் சற்று கவனமாக இருக்க வேண்டியது அவசியம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்து செல்வதால், அந்நியோன்னியம் அதிகரிக்கும். விழாக்கள், விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வீர். குடும்ப உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உங்களுக்கு பண வரவு சிறப்பாக இருக்கும். அந்த நிதியை சரியாக பயன்படுத்தவும். சேமிப்பில் அக்கறை செலுத்தவும். பல தொழில்களில் சரியான வகையில் முதலீடு செய்வது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உணவு விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை, அதிகப்படியான விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்போது உணவில் கவனமாக இருப்பது நலன்தரும்.

## ரிஷபம்



அலுவலகம், சொந்த தொழில் புரிபவர்களுக்கு சற்று பணிச் சுமை அதிகரிக்கும். புதிய பதவி, பொறுப்பு, அதிகாரம் கிடைக்கும். தொழில் செய்பவர்கள் வியாபாரம் பெறுக்கிக் கொள்ள தேவையான நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் சிறப்பாக செயல்படுவீர்கள். சிலருக்கு பணிச் சுமை அதிகமாக இருக்கும் என்பதால் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். வல்லுநர்களின்ஆலோசனையைப் பெறுவது நல்லது. எந்த ஒரு இக்கட்டான சூழலையும் சிறப்பாக சமாளிப்பீர்கள். வயதானவர்கள்ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆரோக்கியமான உணவு எடுத்துக் கொள்ளாதவர்களுக்குவயிறு சார்ந்த பிரச்னை ஏற்படும். முடிந்த அளவு சிறிய உடற் பயிற்ச்சி செய்ய பழகிக் கொள்ளுங்கள்.

## மிதுனம்



நல்லுறவு பேணுவதில் சற்று அக்கறை காட்டுவீர்கள், இதனால் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்களிடம் தங்களுக்கு மதிப்பு கூடும். வேலை, தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்வோருக்கு புதிய நம்பிக்கை கிடைக்கும். பணிச்சுமையால் சில கருத்து வேறுபாடு ஏற்படலாம். செலவுகள் அதிகரிக்கும்

என்பதால், ஆடம்பர, வீண் செலவுகளைகுறைத்துக் கொண்டு கவனமாக இருக்கவும். புதிய பொறுப்புகளால் வேலை அதிகரிக்கலாம். தொழிலில் புதிய முயற்சிகளை மேற்கொள்வதால் உங்களுக்கு அதிர்ஷ்டமான பலன்கள் ஏற்படும். உடல் நலனில் அக்கறை தேவை. உடல் நலத்தில் சில பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது ஆரோக்கியமான உணவு அவசியம்.

## கடகம்



குடும்பத்தில் விட்டுக்கொடுத்து, அனுசரித்து செல்லும் போக்கை கடைபிடியுங்கள். இதனால் குடும்பத்தில் தேவையற்ற சச்சரவுகள் தவிர்க்கலாம். நிம்மதியை அனுபவிக்கலாம். நல்ல லாபமும், நிதி நிலை முன்னேற்றம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. செலவுகளைக் குறைத்துக் கொண்டு சேமிப்பது அவசியம். பெரியவர்களின் ஆலோசனையை ஏற்று செயல்களை செய்வதால் வெற்றி ஏற்படும். கடன் திருப்பி செலுத்த வாய்ப்புள்ளது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற விஷயங்கள் நடக்க வாய்ப்புள்ளது. ஆரோக்கிய பிரச்சினையால் செலவுகள் ஏற்படலாம். சரிவிகித உணவு எடுத்துக் கொள்ளுதல், ஆரோக்கிய உணவு மிக அவசியம்.

## சிம்மம்



குடும்பத்தில் அன்யோன்யம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சிறப்பாக செயல்பட்டு நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் இலக்கை அடையகடுமையான முயற்சிகள் தேவைப்படும். உங்கும் வீண் விவாதம் செய்ய வேண்டாம். உங்கள் மீதான மதிப்பு, மரியாதை சமூகத்தில் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். இருப்பினும் அதைக் கடந்து சாதிப்பீர்கள். புதிய திட்டங்கள், முயற்சிகளில் ஈடுபடலாம், ஆனால் புதிய முதலீடு செய்வதில் மிக வும் கவனம் தேவை. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆனால் வயதானவர்களுக்கு உடல் அசதி, சோர்வு, மூட்டு வலி போன்ற தொல்லைகள் எழ வாய்ப்புள்ளது.

## கன்னி

குடும்பத்தில் விஷேசம் நடைபெற வாய்ப்புள் ளது, ஒருசிலருக்கு வரன் அமையும் யோகம் உண்டு, தம்பதியினருக்குள் புரிதல் அதிகரிக்கக் கூடிய சம்பவங்கள் நிகழும். தொழில் செய்யக்கூடியவர்களுக்கு லாபம் சிறப்பாக இருந்தாலும், சில சிக்கல்களும் ஏற்படும். புதிய முதலீடுகள் செய்வதில் கூடுதல் கவனம் தேவை. சாதக பலன் பெற பொறுமை தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். உங்களின் இலக்கை அடைய சரியான திட்டமிடல் தேவை. கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு லாபம் ஏற்படக்கூடிய மாதமாக இருக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறு சிறு உடல் பிரச்சனை தோன்றி மறையும்.



## துலாம்



இந்த மாதம் ஒரு கலவை மாதமாக இருக்கும், தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சிகள், திட்டங்களை மேற்கொள்ளலாம். அதன் மூலம் நீங்கள் நினைத்த லாபத்தையும், வருமானத்தையும் ஈட்ட முடியும். நிதிப் பிரச்னை தீரும். உத்தியோகஸ்தர்கள் வேலையை சிறப்பாக செய்து மேலதிகாரிகளிடம் நல்ல மதிப்பை பெறுவீர்கள். சிலருக்கு தொழில், வேலை விஷயமாக இட மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. சிலருக்கு உடல் நல கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது என்ப தால் எந்த ஒரு உடல் நல பிரச்னையையும் அலட்சியப்படுத்தக்கூடாது. உணவு விஷயத்தில் சிறு கட்டுப்பாடு விதித்துக் கொள்வது சில பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும்.

## விருச்சிகம்



வியாபாரம், தொழில்செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். தொழி லில் இருந்த மந்த நிலை நீங்கி சுறுசுறுப்பு அடையும். பல விதத்தில் நற்பலன்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்களின்நிதிநிலைமை முன்னேற்றம் ஏற்படும். அதே சமயம் அதிக செலவு ஏற்படவும் வாய்ப்புள்ளது. குடும்பத்தாருடன் இணக்கமான சூழல் இருந்தாலும், பேச்சில் நிதானமும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது அவசியம். உடல் நலனில் சற்று கவனமாக இருக்கவும். மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். மாத இறுதியில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்களும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் குலதெய்வங்களை வழிபடுவது நன்மை.

## தனுசு



உங்கள் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமும் லாபமும் ஏற்படும். கடன் அடைக்கும் வழி ஏற்படும். இருப்பினும் எதிர் பாராத செலவுகள், வீண் செலவுகள் ஏற்படலாம்.அதனால் செலவுகள்கவனம் செலுத்துவது அவசியம். பொதுவாக இந்த மாதத்தில் கலவையான பலன்கள்கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி பெருமூச்சு விடுவீர்கள். அமைதி நிலைக்கும். எதிர்பார்த்த பொருளாதார நிலை, வேலை கிடைக்கும். குடும்பத்தில் இருக்கும் பெரியவர்களின் பேச்சு, ஆலோசனையைக் கேட்டு நடப்பதால் நல்லது நடக்கும். ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வயிறு, ஜீரணம் சார்ந்த பிரச்னைகள் ஏற்படலாம். சரியான நேரத்தில் உணவு எடுத்துக் கொள்வதும், சுத்தமான உணவு எடுத்துக் கொள்வது அவசியம்.

## மகரம்



இம்மாதத்தின் முன்பாதி நன்மையும், அடுத்த பாதி ஒருசில சிறிய தீமையும் ஏற்பட வாய்ப்புள்ளது.குடும்பத்தில் மகிழ்ச்சியும், நிம்மதியும் இருந்தாலும், திருமணமான தம்பதிகள் விட்டுக் கொடுத்துச் செல்வது அவசியம். அதனால் தேவையற்ற வாக்குவாதத்தைத் தவிர்த்து மன நிம்மதியுடன் வாழலாம். குடும்பத்தின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும் என்றாலும் கடன் வாங்குவதைக் கண்டிப்பாக தவிர்க்கவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாக செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் இடைக்கு. லாபம் கிடைக்கும் என்றாலும், உங்களின் பணிச்சுமை சற்று அதிகமாக இருக்கும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கும்பம்



இம்மாதம் செலவுகள் அதிகரிக்கும். வீண் செலவுகள் குறைத்துக் கொண்டு சேமிப்பது அவசியம். சிறப்பான பல பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் அமைதி, நிம்மதி ஏற்படும். குடும்பம் சார்ந்த சில முக்கிய பொறுப்புகள் செய்து முடிக்க வேண்டி இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் உங்களின் பேச்சு, செயலில் நிதானம் தேவை. பணியில் இருப்பவர்களுக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏற்படும். வெளிநாடு சார்ந்த வேலைதேடுவோர், வேலை செய்வோருக்கு மிக சிறப்பான யோகமான நிலை ஏற்படும்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மீனம்



இந்த மாதத்தில் உங்களின் நிதி நிலை சிறப்பாக இருந்தாலும், உங்களின் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் செலவுகளை திட்டமிட்டுச் செய்வது அவசியம். வெளிநாடு வேலைக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்த வேண்டிய மாதம். திருமணமான தம்பதிகள் மகிழ்ச்சியாக வாழ்வீர்கள். உங்களின் உறவினர், நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் ஏற்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும் என்றாலும், உங்களின் புதிய திட்டங்கள், நம்பிக்கை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும். உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# சிவன் முதல் நவகிரகங்கள் வரை குடும்ப சமேதரர்களாய் காட்சியளிக்கும்

# உமாமகேஸ்வரி உடனுறை கைலாயநாதர் திருக்கோயில்




## மூலவரின் சிறப்புகள்:

இத்தல இறைவன் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்தவர்.

இத்தலத்தில் எம்பெருமான் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறார். அதாவது சிம்மாசனத்தில் நந்தியம்பெருமான் மீது அமர்ந்து மஹாராஜா கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

இத்தல இறைவனை மஹாவிஷ்ணு, மாமுனிவர் அகத்தியர் மற்றும் சித்தர் காகபுஜண்டர் வந்து வழிபட்டுள்ளனர்.

இத்தலத்தில் எம்பெருமான் ரம்பைக்கும் ஊர்வசிக்கும் சாபவிமோசனமளித்துள்ளார்.

வருடத்திற்கு மூன்று மாதங்களுக்கும் மேலாக சூரிய ஒளி நேரடியாக மூலவரின் மீது விழுகிறது. குறிப்பாக உத்தராயணத்தில் சித்ரா பௌர்ணமி முதல் தட்சணாயணத்தில் ஆடி அமாவாசை வரை இந்நிகழ்வு நடைபெறுகிறது.

இத்தல இறைவனை சர்பம் வந்து வழிபடும்.

## அம்பாள் சிறப்புகள்:

இத்தலத்தில் உள்ள பழைய அம்பாள் சிலை மதுரை மீனாட்சியை போன்று மரகதத் திருமேனியாகும். அது பிண்டமாகிருப்பதால் புதிய கருங்கல் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் அம்பாள் சாந்தசரூபியாக அருள்பாலிக்கிறார். ஆதலால்தான் இத்தலத்தில் அம்பாளுக்கு நந்தி வாகனம் அமைந்துள்ளது.

இத்தலத்தில் அம்பாள் சந்நிதியில் மஹாமேரு அமைந்துள்ளது .

## கோயிலின் தொன்மையான விஷயம்:

அந்த காலத்தில் அனைவராலும் காசிக்கு செல்ல இயலாது காரணம் ரயில், விமானம் போன்ற எந்த வசதியும் கிடையாது. நடந்தே தான் செல்ல வேண்டும் இது அனைவராலும் சாத்தியம் கிடையாது. ஆகவே நம்மை உய்ய எம்பெருமான் இங்கு உத்திரகாவேரி ஆற்றங்கரையில் தோன்றி அருள்பாலிக்கிறார். எனவே இது காசிக்கு நிகரான திருத்தலம் ஆகும்.

கங்கை எப்போதும் வடக்கிலிருந்து தெற்கே பாயும் காசியில் மட்டும் இயற்கைக்கு மாறாக தெற்கிலிருந்து வடக்கே நோக்கி பாயும். அதே போல் தான் இங்குள்ள உத்திரகாவேரி நதியும் தெற்கிலிருந்து வடக்கே நோக்கி பாய்கிறது கங்கையை விட ஒரு படி மேலே சென்று உத்திர காவேரி நதியானது எம்பெருமான் ஆலயத்தை தொட்டு திரும்புகிறது அதாவது அவருடைய

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



திருவடியை தொட்டு வணங்கி செல்கிறது.

இத்தலத்தில் சித்தன் திவ்யமுனி மற்றும் சித்தன் இராமலிங்கன் சுவாமிகள் என இரண்டு சித்தர்கள் ஜீவ சமாதி அடைந்துள்ளார்கள்.

பெங்களூரில் அல்சூர் ஏரிக்கரையில் ஜீவ சமாதி கொண்டிருக்கும் சித்தர் ஒடுகத்தூர் மகான் இத்தலத்தில் தங்கி வழிபாடு செய்து பின்னர் பெங்களூரில் அல்சூர் என்ற பகுதியை அடைந்து அங்கு முருகப்பெருமானுக்கு ஆலயம் எழுப்பி அங்கேயே ஜீவசமாதி அடைந்தார்.

இத்தலத்தில் அகத்தியர் சத்தியம் செய்துள்ளார் அதாவது இத்தல இறைவன் என்னியதை எண்ணியவாரே அருள்வார் இது சத்தியம். என்று அகத்தியர் ஜீவநாடி வழியாக கூறியுள்ளார்.

இத்தலத்தில் எவ்வாறு சுவாமி மற்றும் அம்பாள் சந்நிதி அமைந்துள்ளதோ அதே போன்றுதான் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மலையும் இருக்கும் அதாவது ஆலயத்திற்கு எதிரே அம்மையப்பர் போலவே அந்த மலை காட்சி தரும்.

இது கல்யாண திருத்தலமாகும் அதாவது சுவாமிக்கு எப்படி அம்பாளோ அதேபோன்றுதான் மஹாவிஷ்ணுவிற்க்கு மஹா லக்ஷ்மி, பிரம்மாவிற்கு சரஸ்வதி, நவகிரக மூர்த்தங்களும் தங்களுக்குரிய வாகனம் மற்றும் மனைவியரோடு அருள்பாலிக்கின்றனர். அதே போன்று இத்தலத்தில் சொர்ன ஆகர்ஷண பைரவர் (பைரவியோடு) அருள்பாலிக்கிறார்.

## தல புராணம்:

இந்த ஆலயம் கிபி 8-ம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தது. ஒரு காலத்தில் ஒடுத்தூர் மகான் இங்கு வழிபாடு செய்துக் கொண்டிருந்த போது இங்கு சிறப்பான வழிபாடுகள் நடைபெற்று வந்தன. ஒரு சில காரணத்தினால் அவர் இங்கிருந்து சென்ற பின்னர் ஆலயத்தில் வழிபாடுகள் குன்றியது, எனவே எம்பெருமான் அருகில் இருக்கும் உத்திரகாவேரி ஆற்றினில் பெருவெள்ளத்தை வரச் செய்து ஆலயத்தை சிதிலமடையச் செய்தார்.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஊரில் வாழ்ந்து வந்த அடியார் ஒருவர் கனவில் தோன்றி தான் இங் கிருக்கிறேன் எனக்கு கோயில் கட்ட வேண்டும் என்று உத்தர விட்டார். அன்று முதல் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வழிபாடு செய்து வந்தோம். இதில் கடந்த 7 ஆண்டுகளில் திருப்பணி செய்து பிப்பிரவரி 14 அன்று எம் பெருமான் உத்தரவுபடி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## பிரதான சுவாமிகள்

இத்தலத்தில் இருக்கும் விநாயகப்பெருமானை வேறு எங்குமே காண இயலாது. இங்கு விநாயகப் பெருமான் பதினாறு செல்வங்களை அருளக்கூடிய ஆதி கைலாய விநாயகராக அருள்பாலிக்கிறார். அதாவது இரண்டு தந்தங்களும் முழுமையாக காணப்படும், கையில் சிவலிங்கம் வைத்து சிவபூஜை செய்வது போன்று அருள்பாலிக்கிறார்.

இத்தலத்தில் நந்தியம்பெருமான் நால்வர், நர்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ் வரர், துர்கை, சுப்ரமணியர் என அனைவரும் அருள்பாலிக்கின்றனர்.

## பரிகாரம்:

திருமணம் ஆகாதவர்கள் இத்தலத்திற்கு வந்து குறைந்த ஆறு பிரதோஷமாவது வந்து எம்பெருமானை தரிசித்தாலே திருமணத்தடை நீங்குகிறது.

கணவன் மனைவி பிரச்சினை இல்லத்தில் பிரச்சினை மனக்குழப்பம் உள்ளவர்கள் இத்தலத் திற்கு வந்தாலே அவர்களுக்கு ஒரு மாற்றம் உண்டாகிறது. குழந்தை செல்வம் இல்லாத பல பேர் இத்தல இறைவனை வேண்டி அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டுள்ளது.

எங்களுக்கு வேலை ஏதும் கிடைக்கவில்லையே என்று கூறி தவித்த பலபேருக்கு இத்தல எம்பெரு மான் அவர்களுக்கு வேலையின்மை பிரச்சனையை தீர்த்துள்ளார்.

## கோயில் பிரசாதம்

இத்தலத்தில் அனைவருக்கும் எம்பெருமான் மீது சாற்றி வழிபட்ட ஒரிஜினல் பசுஞ்சான திருநீறு பிரசாதமாக வழங் கப்படுகிறது. எம்பெருமா னை மனதார நினைத்து இதனை பயன் படுத்துகின்ற அநேகபேருக்கு இது பிர சாதம் மட்டுமல்ல நோய் நீக் கும் மருந்தாகவும் உள்ளது.

இத்தலத்திற்குவருகின்ற அனைவருக்கும் எம்பெரு மான் மீது அபிஷேகம் செய்த மருத்துவ குணம் வாய்ந்த மூலிகை தீர்த பிரசாதம் வழங்கப்படுகிறது.

## ஆலயத்தின் முக்கிய விழாக்கள்:

ஒவ்வொரு பிரதோஷ வழிபாடும் இத்தலத்தில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. குறைந்தது ஐந் நூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து கலந்து கொள்கிறார்கள். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

மஹா சிவராத்திரி வழிபாடு, ஐப்பசி அன்னாபி ஷேக வழிபாடுகள் மற்றும் சனிப்பெயர்ச்சி, குருபெயர்ச்சி, இராகு, கேது பெயர்ச்சி முதலிய நிகழ்ச்சிகள் ஆலயத்தில் சிறப்பாக நடை பெறுகிறது.

இத்தலத்தில் தை அமாவாசை மற்றும் ஆடி அமாவாசை பித்ரு தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் அன்று ஆலயத்திற்கு அருகே யுள்ள உத்திரகாவேரி ஆற்றங்கரையில் முன்னோர் களுக்கான தர்பணம் விடும் நிகழ்வும் நடை பெறுகிறது.

## பக்தர்களின் நேர்த்திக்கடன்:

குழந்தையில்லாதவர்கள் இத்தலத்திற்கு வந்து குழந்தை செல்வம் கிடைத்த பின் எடைக்கு எடை காசு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

அதுமட்டுமின்றி திருமணம், வேலையின்மை முதலான பலபிரச்ச னையில் இருப்பவர்கள் இங்கு வந்து தங்களது கோரிக்கைகள் நிறைவேறிய பின்னர் பிரதோஷ வழிபாட்டினை ஏற்றுக்கொள்கின்றனர் அந்நேரத்தில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது.


சிவ அரிவசந்த்

– சிவ அரிவசந்த்
8695875868



# நான்கு உற்சவர்களாக காட்சியளிக்கும் திருச்செந்தூர் முருகன்

திருச்செந்தூர் திருக்கோவிலில் நான்கு உற்சவ மூர்த்திகள் உண்டு.

1.ஜெயந்திநாதர்

2.அலைவாயுகந்தர்

3.குமாரவிடங்கர்

4.சண்முகர்.

## ஜெயந்தி நாதர்:

ஜெயந்திநாதர் தான் சஷ்டி விழாநாயகர். கந்த சஷ்டி உற்சவத்தில் இவரே பிரதானமூர்த்தி. சூரனை சம்காரம் செய்து வெற்றிவாகை சூடியதால் ஜெயந்திநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

இவர் சஷ்டி உற்சவம், வசந்த உற்சவம் மற்றும் அன்றாட தங்கத்தேர் உற்சவத்திலும் எழுந்தருளுவார்.

## அலைவாயு கந்தர்:

இவர் வைகாசி விசாக நாயகர். வைகாசி விசாக திருவிழாவன்று மேலக்கோவிலில் இருந்து தங்கமயில் வாகனத்தில் எழுந்தருள்வார். தவிர மாசி, ஆவணி திருவிழாக்களில் குதிரை வாகனத்தில் எழுந்தருளி பரிவேட்டை காண்பார்.

## குமரவிடங்கர்:

இவர் ஆவணி, மாசி திருவிழாவில் எழுந்தருளும் பிரதான உற்சவர். மேலும் ஐப்பசியில் சஷ்டி முடிந்து தெய்வானை திருக் கல்யாணத்திலும், பங்குனி உத்திரத்தில் வள்ளி திருக் கல்யாணத்திலும் இவரே மாப்பிள்ளை சுவாமி.

## சண்முகர்:

ஆறுமுகநயினார் என்று சிறப்பிக்கப்படும் மூர்த்தி. ஆறுமுகங்களும், பன்னிரண்டு கரங்களும் கொண்ட பெருமான். கோவிலுக்குள் தெற்கு வாசல் வழியாக நுழையும் போது நேரெதிராக காட்சித்தரும் பெருமான். இவர் வருடத்தில் இருமுறை ஆவணி, மாசித்திருவிழாவின் ஏழாம் திருநாள் சிவப்பு சாத்தி கோலத்திலும், எட்டாம் திருநாளில் வெள்ளை சாத்தி கோலத்திலும், பச்சை சாத்தி கோலத்திலும் வீதிஉலா எழுந்தருளுவார்.

# 140 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்
2.ஆன்மிகமலர் Mobile app
3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம்
ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு,
ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம்,
அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,
போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில்
வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:
சி.வி.நடராஜன் 9444228203



# பரமபத வாசலை தொட எளிமையான வழி

கடவுள் உருவாக்கிய மதம்

இந்த பக்தி பாவத்தின் ஆதாரத்ததுவம் என்னவென்றால் இந்த உலகத்தை படைத்தவன் இறைவன் என்பதால் அவன் புருஷனாகிறான். அவனுக்கு ஈடு இணையாக யாருமே இல்லை என்பதனால் அவனே புருஷோத்தமனாகிறான். புருஷர்களில் மிக உயர்ந்தவன் இறை வன் மட்டும்தான் என்பதனால் அவன் ஒருவனே ஆண் மகனாகவும் இருக் கிறான். உயிர்கள் அனைத்தும் அவைகள் பெண் உடலை தாங்கி யிருந்தாலும் ஆண் உடம்பில் இருந்தா லும் பெண் பாலாகவே கருதப்பட வேண்டும் தன்னை பெண்ணாக கருதி இறை வனைஆணாக கருதி பக்தி செலுத்தும் போது மிக விரைவில் பரமபத வாசலை தொட்டுவிட முடியும்.

நாச்சியார் திருமொழியை தமிழ் உலகிற்கு தந்த ஆண்டாளும், ஏராளமான பக்திரசம் சொட்டப்படும் கவிதைகளை இந்தி இலக்கியத் திற்கு வழங்கிய மீராவும் இயல்பாகவே பெண் என்பதால் அவர்களுக்கு கார்மேக வண்ணனை நாயகனாக பாடுவதில் நெஞ்சார நினைத்து மனதார கூடுவதில் எந்த சிரமமும் இருப்பதற்கு இல்லை.

ஆனால் ஆண்மை சரிரத்தை பெற்ற அடியார் கள் தங்களை பெண்ணாக பாவித்து பக்தியில் கலப்பது உணர்வு பூர்வமான சிக்கலாகும். ஆனால் இறைவன் பால் வைக்கின்ற தீவிரமான அன்பால் அழகு தமிழில் பாசுரங்கள் பல தந்த திருமங்கை யாழ்வார் தன்னை பரகாலனாக உருவகப்படுத்தி பாடுகின்ற போது பரகால நாயகியாகவும் உருவகப்படுத்தி இறைவன் மீது தனது தீராத காதலை வெளிப்படுத்தினார். இதைப் போலவே நம்மாழ்வாரும் தன்னை பாராங்குச நாயகியாக பாவித்து பரந்தாமன் மீது மையல் கொள்கிறார்.

காதல், பாலுணர்ச்சி என்பதெல்லாம் உயிர்களை கீழ்நிலைபப்டுத்தும் உறவுகள் தான் என்றாலும் அதே உணர்வுகள் அழியாத வஸ்துவான இறைவன் மீது வைக்கும் போது விவரிக்க முடியாத ஆன்மீக அனுபவங்களை




வாழ்க்கை பற்றிய ஞான அனுபூதிகளை மனிதனுக்கு தருகிறது.

ஐந்தாவது உறவாக ஸ்ரீவைஷ்ணவம் அறிபவன், அறியப் படுபவன் உறவு என்ற " ஞாத்துரு ஞேய" சம்பந்தம் என்பதை பேசுகிறது. எதை அறிந்த பிறகு வேறு எந்த பொருளும் அறியக்கூடிய விஷயமாக இல்லையோ அந்த பொருளே பரம்பொருளாகும். அதாவது விஷ்வரூபியான மகா விஷ்ணுவை அறிந்த பிறகு அறிவதற்கு வேறு ஒன்றுமே உலகத்தில் கிடையாது. அத்தகைய அறிவு மூலப்பரம்பொருளை அறிந்தவனுக்கு பெயர்தான் ஞானி அந்த சொல் அறிபவனையும் "ஞேயம்" என்ற சொல் அறியப்படும் பொருளையும் குறிப்பதாகும். இதனடிப்படையில் ஞானியாக விழைப்பவன் உலக விஷயங்களை புறம் தள்ளி பரமாத்திக விஷயங்களை நோக்கி நடைபோட வேண்டும். அப்படி நடைபோடும் போது ஞானத்தின் இறுதி எல்லையான வைகுண்ட வாசஸ்தலம் நிரந்தரமாக கிடைத்துவிடும்.

ஆறாவதாக சுவசுவாமி சம்பந்தம் என்ற உடைமை, உடையான் உறவு வருகிறது. உடைமை என்பது நமக்கு சொந்தமான பொருளை குறிக்கும். அந்த உடைமையானது நம்மிடருந்து விலகிப்போகாமல் பாதுகாப்பது நமது நித்திய கடமையாகும். காரணம் உடைமைகள் இல்லாத உடையவன் பெருமைக்குரியவனாக மாட்டான்.

மனிதர்களாகிய நாம் அனைவரும் திருவரங்கத்தானின் பரம உடைமையாவோம். நம்மை பாதுகாக்க வேண்டியது உடையவனின் கட்டாய கடமையாகும். இக்கட்டாய கடமை எப்படிப்பட்டது. என்று "ஸ்ரீ வைஷ்ணவம்" எளிமையான விளக்கம் தருகிறது.

ஒரு அரசன் இருக்கிறான் அவன் தன்னை அலங்கரித்து கொள்ள ஏராளமான அணிகலங்களை உடல் முழுவதும் அணிந்து கொள்கிறான். அப்போது அவன் விரலில் இருக்கும் மரகத கணையாழி ஒன்று காணாமல் போகிறது. பச்சை பசும் ஒளியை விரல்களிலிருந்து நாலா திசையும் வாரி இறைத்து கொண்டிருந்த கணையாழி காணாமல் போனது யாருக்கு இழப்பு அணிந்து கொண்டிருந்த அரசனுக்கா



அணியப்பட்ட பொருளுக்கா சந்தேகமே வேண்டாம். பொருள் இழப்பு என்பது அரசனுக்குத்தான்.

அதே போல கடவுளின் உடைமையாக இருக்கும் என்னை சரியான முறையில் பாதுகாக்காமல் காம சேற்றில் தவற விட்டுவிட்டால் நான் சாக்கடையில் கிடந்து நாறுகிறேன் என்பது வேறு விஷயம்.ஆனாலும் பக்தனாக இருக்கும் என்னை காமுகனாக ஆக்கி இழந்து நாராயணன் தானே ஆகவே என்னை இழக்காமல் என் மீது சேறும் சகதியும் பூசாமல் பாதுகாக்க வேண்டியது பகவானின் கடமையாகிறது.

ஆஹா என்ன அழகான ஒரு உறவு முறை இது என்னை இழந்தால் இழப்பு உனக்குத்தான் அதனால் என்னை நீ பாதுகாத்தே ஆகவேண்டும் என்று கடவுளுக்கே கட்டளை போட அவனிடம் நமக்கு எவ்வளவு உரிமையிருக்க வேண்டும், எவ்வளவு பாசம் இருக்க வேண்டும்.

ஏழாவதாக தாரிய தாரக சம்பந்தம் அதாவது தாங்குபவன் தாங்கபடுபவன் உறவு என்பதாகும். ஒரு நிமிடம் கூட ஒய்வு ஒழிச்சல் இல்லாமல் நகர்ந்து கொண்டேயிருக்கும் இந்த பிரபஞ்சம் எதன் மீது நகர்கிறது.

சுற்றிக்கொண்டேயிருக்கும் பூமியும் மற்ற கிரகங்களும் எதை ஆதாரமாக பிடித்து சுற்றிக்கொண்டு இருக்கிறது. கடவுள் என்ற “பரப்பிரம்மமே” இவையனைத்தையும் தாங்கும் பொருளாக இருக்கிறது. கோவர்த்தண மலையை இடையாக பிடித்து கோபாலன் நின்ற கோலமே இந்த தத்துவத்தின் உருவக விளக்கமாகும். தாரிய என்ற சொல் தாங்குகின்ற தாமோதரனையும் தாரக என்ற சொல் தாங்கப்படும் தரணியையும் காட்டுவதாகும்.

எட்டாவதாக ஓங்கி உலகளந்த உத்தமனுக்கு ஜீவன்கள் அனைத்தும் உடம்பாகவும் அவனே எல்லாவற்றின் உயிராகவும் கருதப்படும். சரிர சாரிர சம்பந்தம் என்ற உடம்பு உயிர் உறவாகவும்



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

போத்துரு போக்கிய சம்பந்தம் என்ற நுகர்பவன் நுகரப்படும் பொருள் உறவு என்ற ஒன்பதாவது உறவும் சிறப்பாக பேசப்படுகிறது.

இவைகளை பொதுவாக நவவித சம்பந்தம் என்று வைஷ்ணவர்கள் கருதினாலும் இது தவிர தாய் குழந்தை உறவு குலமகள் கணவன் உறவு குடிமகன் கோமகன்உறவு நோயாளி மருத்துவன் உறவு என்று பல்வேறுபட்ட உறவு முறைகள் கடவுளோடு மனிதன் மிக நெருக்கமாக உறவு வைத்துக்கொள்ளும் வழி முறைகள் கூறுகிறது. இது தவிர இன்னும் வைஷ்ணவத்தின் தெய்வீக கருத்துக்கள் மிக ஏராளமாக உள்ளன. அவைகளையும் இனி வரும் அத்தியாயங்களில் தொடர்ந்து சிந்திப் போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com







இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்







# நொய்டாவில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் ஜீரணோதரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

நொய்டாவில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் ஜீரணோதரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 29 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமை அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கும்பகோணத்தைச் சேர்ந்த பிரம்மாஸ்ரீ ஸ்ரீ வருண் சர்மா அவர்களால் ஆகஸ்ட் 29 ஆம் தேதி திங்கட்கிழமை கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து அனைத்து தெய்வங்களுக் கும் அபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஷங்கர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீராம் ஆகியோர், VPSஇன் ஆஸ்தான வாத்தியர்களாக, தினசரி ஹோமங்கள் மற்றும் பூஜைகளை ஏற்பாடு செய்தனர், கோயில் அர்ச்சகர் ஸ்ரீ ஜெகதீசன் சிவாச்சாரியார் உதவினார்.

ஆகஸ்ட் 27ம் தேதி வேதமந்திரம் முழங்க, அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, க்ரிஹபிருத்தி, மிருத்சங்கர்ஹணம், அங்கூரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், வாஸ்து சாந்தி, யாகசாலை பிரவேசம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள், ஹோமங்களுக்கு மத்தியில் துவங்கியது.

மேலும், 28ம் தேதி விக்னேஷ்வர பூஜை, புண்யாஹவாசனம், நாந்தி ஸ்ரார்த்தம். வைஷ்ணவ ஸ்ரார்த்தம், வைதிக பூஜை, மண்டப பூஜை, தோரண பூஜை, பிரார்த்தனை தேவதா ஆவாஹனம், பூஜைகள், ஹோமம்கள், 1ம் கால பூர்ணாஹுதி, நெய்வேத்யம், மற்றும் ஹாரதி நடைபெற்றது.

ஆகஸ்ட் 29ம் தேதி மகா கும்பாபிஷேக நாளான 3ம் கால யாகசாலை பூஜைகள், ஜபம், ஸ்பர்ஷாஹுதி, நாடி சந்தானம், பூர்ணாஹுதி, நைவேத்யம், ஹாரத்தி, யாத்ரா தான சங்கல்பம், காடணி ஊர்வலம் நடைபெற்றது. மகா அபிசேகம், பிரகாதிபதிகள் அனைத்து பக்தர்களுக்கும் வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 25 மற்றும் 26 தேதிகளில் ரிக் – யஜுர் வேத பாராயணம், கும்பகோணத்தைச் சேர்ந்த (தமிழ்நாடு) பிரம்மஸ்ரீ ஸ்ரீ வருண் சர்மா அவர்களின் மேற்பார்வையில், இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வேத பண்டிதர்களைக் கொண்ட குழுவுடன், பிரிவு 22 கோயில் வளாகத்தில் நடத்தப்பட்டது.

பக்தர்கள் 'ஸ்ரீ வரசித்தி விநயருக்கு ஜெய்' என்று கோஷமிட்டதைக் காண முடிந்தது, மேலும் ஸ்ரீ விநாயகப் பெருமானைப் போற்றிப்





பல்வேறு பக்திப் பாடல்களும் பாடப்பட்டன. பூம்புகாரைச் சேர்ந்த ஸ்தபதி ஜி வினோத் மற்றும் அவரது குழுவினர் மற்றும், ஸ்ரீ மதன் பண்டிட், நொய்டா ஆகியோர் இந்தப் பணியை முடிக்க கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

நிறுவப்பட்ட சிலைகளில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் (மூலவர்), ஸ்ரீ நவகிரகங்கள் மற்றும் ஸ்ரீ துர்க்கை சன்னதிகள் உள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில், ஸ்ரீ காஞ்சி மடம் அவர்கள் ஆகஸ்ட் 11, 2022 தேதியிட்ட கடிதத்தின் மூலம், ஆகஸ்ட் 29, மகா கும்பாபிஷேக விழாவை ஆசீர்வதித்தார்.

காஞ்சி மடத்தின் கடிதத்தை VPS Wg Cdr (ஓய்வு) S சந்திரசேகர் மூத்த உறுப்பினர்களில் ஒருவரால் வாசிக்கப்பட்டது, அதே நேரத்தில், 1987 முதல் தொடர்புடையமூத்த உறுப்பினர்களில் ஒருவரான வேதமூர்த்தி, இந்தக் கோயிலைக் கொண்டுவந்ததில் தனது அனுபவங்களை விவரித்தார்.



எஸ்.வெங்கடேசன்

இதையொட்டி ஏராளமான பக்தர்கள் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்த னர்.

கோவில் நிர்வாகத்தின் சார்பாக, ரவி சர்மா, பக்தர்கள், நன்கொடையாளர்கள், ஸ்பான்சர்கள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள், குறிப்பாக: வேதமூர்த்தி, சிவராமன், கீரீ Cdr S சந்திரசேகர், ஸ்ரீதர் ஐயர், TN அரசு, பழனி, மற்றும் ஸ்ரீமதி ஜானகி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். , மற்றும் அனைத்து பணிகளிலும் உதவியதற்காக கோவில் பணியாளர்கள்: ஜனக் பகதூர், கிஷோரிலால் மற்றும் வினோத் ஆகியோரையும் பாராட்டினார்.

வி.பி.எஸ்., முப்பது ஆண்டுகளுக்கு முன், ஒத்த எண்ணம் கொண்ட பக்தர்களால் துவங்கப்பட்டு, அன்னதானம், பிரதோஷ பூஜை, வாராந்திர பாராயணம் மற்றும் மாதாந்திர ஸ்ரீ சங்கடஹர சதுர்த்தி உள்ளிட்டபல்வேறு சமய, சமூக, கலாச்சார நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370



# தேக மின்விளக்கை ஒளிரச்செய்யும் மின்சக்தியை ஆராயுங்கள்

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: “நீங்கள் எப்பொழுதும் ஸ்தூல தேகமின் விளக்கையே பேணி வருகிறீர்கள். அந்த மின் விளக்கை ஒளிரச்செய்யும் மின்சக்தியை ஆராய்வது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்பதை எப்போதாவது சிந்தித்துள்ளீர்களா? கண்ணுக்குப் புலனாகும் மனிதன், அடிப்படையில், ஒருகடையில் விலைக்கு வாங்கக்கூடிய பதினாறு இரசாயனமூலப்பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளான். உங்களுடைய உடல் ஏறக்குறைய தொண்ணூறு சென்டிற்கான மதிப்பை மட்டுமே உடையது; வியாபாரம் மந்தமான நேரங்களில் அதன் மதிப்பு இன்னும் குறைவு! கண்ணுக்குப் புலனாகாத மனிதனுடன் ஏன் ஒரு நல்ல அறிமுகத்தை வளர்த்துக்கொள்ளக்கூடாது? அவன்தான் ஆற்றலையும் அன்பையும் பெற்றிருப்பவன். அவனில்லாமல், கண்ணிற்குப் புலப்படும் மனிதன், அவன் ஆக்கப்பட்டுள்ள இரசாயனப் பொருட்களைத் தவிர வேறொன்றையும் பெற்றிருக்க வில்லை.”

மேலும் அவர் தொடர்கிறார்: “ உங்களுடைய கவனமென்னும் ஒளி வட்டத்தை வரம்பிற்குட்பட்ட, கண்ணிற்குத்தெரியும் மனிதனிடமிருந்து விலக்கி உள்நோக்கித் திருப்புங்கள். பூத உடல் முதுகுவலிகளையும் வயிற்று வலிகளையும் உடையது; அது முதுமையில் படிப்படியாக சீர்கெடுதலுக்கு ஆளாகிறது. எப்பொழுதும் ஏதோ ஒன்றிற்காக அழுதுகொண்டும் புலம்பிக்கொண்டும் உள்ள மிக அருவருக்கத்தக்க சிறியமிருகம்! கண்ணிற்குத் தெரியும் மனிதன் கீழே மோசமாக விழுந்தால் அவன் அதைத் தாங்கமாட்டான். அத்துடன் அவன் சில சமயங்களில் சிறு தொல்லைகளைக் கண்டும் பின்வாங்குகிறான்; கண்ணுக்குப் புலனாகாத மனிதன் எதனாலும் புண்படமாட்டான், அவன் சுதந்திரமானவன். பூத உடலின் சகல தொல்லைகளையும் அவனால் அகற்றிவிடமுடியும். உங்களுக்குள் உள்ள கண்ணுக்குப் புலனாகாத மனிதன் நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அவனேதான். அனைத்துப்பொருட்களிலும் ஊடுருவிப் பரந்துள்ள அந்தப் பரம்பொருள் அழியாதவன். மாற்ற முடியாத இந்த மெய்ப்பொருளை அழிக்கும் சக்தி எதற்கும் இல்லை.” (பகவத் கீதை அத் 2 ஸ்லோகம்.17)




“நீங்கள் உங்களை தேகம்தான் என நினைக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அப்படியில்லை. ஒரு பனிக்கட்டித்துண்டை திரவமாக உருக்க முடியும்; அதன் பின்பு அதை ஆவியாக்குவதன்மூலம் மறையச்செய்யவும் முடியும். இச்செயற்பாட்டை தலைகீழாகத் திருப்பி, ஆவியைத் திரவமாகச் சுருக்கவும், திரவத்தை மீண்டும் ஒருமுறை பனிக்கட்டியாக திடரூபத்தில் உறையவும் செய்ய முடியும். சாதாரண மனிதன் இதைப்போன்ற மாற்றங்களைத் தனது தேக அணுக்களுடன் செய்வதற்கு இன்னும் கற்றுக்கொள்ளவில்லை,”

மனிதனுடைய உடல் இறைவனின் 35 எண்ணங்களால் ஆக்கப்பட்டுள்ளது.

குருதேவர் தொடர்கிறார்: “16 சட மூலப்பொருட்களால் ஆன மனித உடல், இரண்டு உடல்களைக் கொண்டுள்ள — மின்னோட்டங்களால் ஆக்கப்பட்ட சூட்சும தேகம் ஒன்று, எண்ணங்களால் ஆக்கப்பட்ட காரணதேகம் ஒன்று — கண்ணுக்குப் புலனாகாத மனிதனின் நிழலைவிட மேலாக வேறொன்றும் இல்லை. உங்களுடைய

சூட்சும ஒளி வடிவம் 19 மூல வஸ்துகளைக் கொண்டுள்ளது. மற்றும் உங்களுடைய கண்ணுக்குப் புலனாகாத காரணவடிவம் 35 எண்ணங்களால் ஆக்கப்பட்டுள்ளது. உங்களுடைய சூட்சும சரீரத்தின் 19 மின் மூல வஸ்துக்களை உண்டாக்கிய 19 எண்ணங்கள் மற்றும் உங்களுடைய பூத உடலின் 16 ஸ்தூல சட வஸ்துக்களை உண்டாக்கிய 16 எண்ணங்கள், இறைவன் இரும்பு, பொட்டாசியம் மற்றும் இதர இரசாயன மூல வஸ்துக்களை முதலில் எண்ணத்தில் படைத்தான் பின்பு உங்களுடைய பூத உடலை உண்டாக்குவதற்கு அவற்றை சடப்பொருட்களாக உருவாக்கினான். நிஜமான நீங்கள் கண்ணுக்குப் புலனாகாதவர். ஏனெனில், உங்களுடைய பூத உடலும் அத்துடன்கூட படைப்பிலுள்ள அனைத்தும் முதலில் எண்ணத்தில் படைக்கப்பட்டதாகும்.”

“ஆகவே, உங்கள் சரீரம் அடிப்படையில் 35 எண்ணங்களைக்கொண்ட ஒரு காரணவடிவமாகும். இது ஒளி மற்றும் சக்தியின் 19 மூல வஸ்துக்களாலான சூட்சும சரீரத்திற்குள் அமைந்துள்ளது. இந்த சூட்சும சரீரம், திரும்பவும் 16 இரசாயன மூல வஸ்துக்களாலான ஸ்தூல சரீரக்கூட்டில் அடைக்கப்பட்டுள்ளது. நீங்கள் இறக்கும்போது கண்ணுக்குப் புலனாகும் ஸ்தூல உடல் மறைந்துவிடும்; ஆனால் உள்ளுக்குள் உள்ள கண்ணுக்குப் புலனாகாத ஆன்மாவின் சூட்சும சரீரம் உங்களுக்கு நிஜமானதாக இருக்கும். அப்போது உங்களுடைய சூட்சும வடிவத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியவரும். உயர்ந்த ஆன்மீக முன்னேற்றத்தின் மூலமாக உங்களுடைய நுட்பமான சூட்சும தேகம் 35 எண்ணங்களாகக் குறைக்கப்படலாம் என்பதையும் மேலும் அந்த 35 எண்ணங்களின் பின்னணியில் உள்ள உங்களுடைய உணர்வு நிலைதான் மெய்மையானது என்பதையும் காண்பீர்கள்; ஏனெனில் உங்களுடைய உணர்வு நிலை அல்லது ஆன்மா, இறைவனின் பிரபஞ்ச உணர்வு நிலையின் ஒரு பொறியே ஆகும்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “ நீங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்த்ததுக் கொண்டிருக்கும்பொழுது திரையில் பல உருவங்களை நீங்கள் காண்கிறீர்கள். ஆனால் நீங்கள் நிமிர்ந்து பார்த்தால், அந்த உருவங்களைத் திரையில் வீசும் ஒரே ஒரு ஒளிக்கற்றையை மட்டுமே நீங்கள் காண்கிறீர்கள். அதுபோலவே, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அதிர்வுறும் படைப்பு மூல வஸ்துக்களின் ஐந்து சக்தி ஒட்டங்கள் மூளையிலிருந்து பாய்ந்து படைப்புத் திரையின்மீது இந்த ஸ்தூல சரீரத்தை உருவாக்குவதற்காகச் சுருங்குகின்றன.”

“திரைப்படங்கள் வழக்கமாக


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

மௌனமானவையாக இருந்தன, தற்சமயம் ஒலி உள்ளது. அத்துடன் ஒரு பூந்தோட்டத்தை நீங்கள் திரையில் காணும்போது அதிலுள்ள மலர்களின் நறுமணத்தையும் நுகரும் வகையில் மணங்களைப்பற்றியும் அவர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். ஒளியினால் உருவாக்கப்படும் அந்த உருவங்கள், தொடுவதற்கும் சுவைப்பதற்கும்கூட ‘உண்மையானவையாக ஆக்கப்படுமானால் நீங்கள் இறைவனுடைய படைப்பின் ஐந்துவித அம்சங்களை உருவாக்கிவிட்டிருப்பீர்கள். மனிதன் எந்த ஐம்புலன்கள் வாயிலாக படைப்பை உணர்ந்தறிகிறானோ, அவை தம்முடைய ஒத்த பகுதிகளை ஐந்து ஆதார மின்சாரங்களில் ஆகாயம் (ஒலி) காற்று(தொடுதல்) நெருப்பு (பார்வை) நீர் (சுவை) நிலம் (மணம்) ஆகியவற்றைக்கொண்டுள்ளன. இவற்றிலிருந்தே படைப்பு உருவாக்கப்பட்டது. ஒருநாள் முழு உலகமும் உங்களுக்கு ஒரு விதமான திரைப்படமாக ஐம்புலன் உணர்வுகளுக்கும் உண்மையாக இருக்கும் ஒளி வடிவங்களாகத் தோன்றும். உலகில் தற்சமயம் நிகழ்ந்துகொண்டிருக்கும் கொடூரங்கள் பெருங்கவலை கொள்ளும்படி நிஜமானவையாக உள்ளன; ஆனால் அவற்றை ஒளி மற்றும் நிழலின் படைப்புகள் என்று உங்களால் காணமுடியும்போது அவை இறைவனுடைய நாடகத்தின் ஒரு பகுதி, ஒரு காட்சி மட்டுமே என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.”



குருப்ரியா

“நீங்கள் தசையினாலான ஓர் உடலைக் கொண்டுள்ளதாக கனவு மட்டுமே கண்டுகொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய உண்மையான ஆன்மா ஒளி மற்றும் உணர்வு நிலை ஆகும். நீங்கள் பூத உடல் அல்ல. தேகத்தின் கண்ணுக்குப் புலனாகும் தன்மை, நமது ஸ்தூல உணர்வு நிலையை ஏமாற்றுகின்றது. நீங்கள் உயர் உணர்வு நிலையை ஏமாற்றுகின்றது. நீங்கள் உயர் உணர்வு நிலையைஷெஉங்களுடைய உண்மையான ஆன்மாவைப்பற்றிய விழிப்புணர்வை ஞ விருத்தி செய்வீர்களானால், தேகமானது அகத்தே இருக்கும் கண்ணுக்குப்புலனாகாத ஆன்மாவின் ஒரு நீட்டிப்பு மட்டுமே என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அப்போது உடலைக்கொண்டு நீங்கள் எதையும் செய்ய முடியும். ஆனால் நீரின்மேல் நடப்பதற்கு இப்பொழுதே முயலவேண்டாம்!”

அவர் மேலும் தொடர்கிறார் “ திரைப்பட அரங்கில் நீங்கள் திரையிலுள்ள வடிவங்களில் முற்றிலுமாக ஆழ்ந்துள்ளீர்கள். அவைகள் எவ்வளவு நிஜமாகத் தோன்றுகின்றன! அந்த வடிவங்களை திரையில் தோற்றுவிக்கும் உங்கள் தலைக்கு மேலாகச் செல்லும் ஒளியைப்பற்றிய உணர்வு உங்களுக்கு இல்லை, ஆனால், நீங்கள் மேலே நோக்குவீர்களானால், கண்ணுக்குப் புலனாகாததிலிருந்து கண்ணுக்குப் புலனாவது வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது; திரையில் தோன்றும் வடிவங்கள் அனைத்தும் திரைப்பட இயந்திர அறையிலிருந்து வெளிப்படுகின்ற அந்த ஓர் ஒளியிலிருந்தே வெளியாகின்றன என்பதை அறிவீர்கள். அந்த ஒளிக்கும் படங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? அந்த ஒளி இல்லாமலிருந்தால் அந்தப்படங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்க முடியுமா? கண்ணுக்குப் புலனாகாத மனிதன் இல்லையென்றால், கண்ணுக்குப் புலனாகும் மனிதனும் இருக்கமாட்டான். கண்ணுக்குப் புலனாகாத மனிதன் ஸ்தூல உருவத்தை விட்டகலும் போது, உடல் சிதைந்துவிடுகின்றது. கண்ணுக்குப் புலனாகும் மனிதனுக்கும் கண்ணுக்குப் புலனாகாத மனிதனுக்கும் இடையே உள்ள நுட்பமான உறவைப் புரிந்துகொள்பவர்கள் ஸ்தூல உடலை நினைத்தவுடன் சிதைக்கவும் தோற்றுவிக்கவும் முடியும். நாம் உண்மையாகக் கண்ணுக்குப் புலனாகாதவர்கள் அல்லது ஆன்மாக்கள் என்பதை மேன்மேலும் உணர்ந்துகொள்ளப்போகின்ற அந்தப் பரிணாம வளர்ச்சியின் காலகட்டத்திற்கு நாம் வந்து கொண்டிருக்கின்றோம்.”

அனைவருக்கும் நன்றாகப் புரியும்படி அன்புமிக்க குருதேவர் விளக்கமாக் கூறியுள்ளார். நாம் சரீரமல்ல, ஆன்மாதான் என்பதற்கு சரியான உதாரணத்தை எடுத்துக்கூறி அனைவருடைய உள்ளத்தையும் தெள்ளத் தெளிய வைத்துள்ளார். இதற்குமேல் எந்த உதாரணமும் தேவையில்லை, இதுதான் உண்மையான குருவின் தன்மை. அவருக்குத் தெரிந்ததை அல்லது அவருக்கு இறைவன் காட்டியுள்ளதை அவர் இறைவனின் குழந்தைகளான மற்ற அனைவருக்கும் காட்டியுள்ளார். குருதேவர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை அவர் சொல்லாமல் சொல்லுகிறார். இதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் அதை அறிய வேண்டும். அதற்காக நாம் முயற்சிக்கவேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909





# ஆன்மிக உலகின்
# முதல் இலவச
# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த
## அனைத்து இதழ்களையும்
## கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)-ல்
படித்து பயன்பெறலாம்


சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**உடல் நலம் பேணி காப்போம்**

# புண்ணியம் சேர்க்கும் புரட்டாசி மாதம்

தமிழ் மாதங்கள் பன்னிரண்டில் ஆறவாது மாதம் தான் “புரட்டாசி மாதம்”. இதனை தெய்வீக மாதம் என்றும் கூறுவதுண்டு. பாற்கடல்நாதன் பரந்தாமனுக்கு உகந்த மாதமாகவும் கருதப்படுகி றது. இதனை ‘முழு விரத மாதம்’ என்றும் கூறு வார்கள்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதம் இருந்து பெருமாளை வணங்குவது மனிதவாழ்க் கைக்கு மிகவும் நல்லது. அங்ஙனம் இயலாதவர் களுக்காகத் தான் இந்த புராட்டாசியில் வரும் சனிக்கிழமைகளில் விரதம் மேற்கொள்ள உகந்த மாதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதங்களிலும் சில நாட்கள் விரத நாட்களாக அனுஷ்டிப்பது வழக்கம். ஆனால் புரட் டாசியை பொருத்த மட்டில் அதில் சனிக்கிழமை விரதம், நவராத்திரி விரதம் என்று மாதம் முழுவதும் விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. அதனால் தான் இதனை ‘விரத மாதம்’ என்று வைத்தார்கள் நம் முன்னோர்கள்.

‘மாதங்களில் நான் மார்கழி’ என்று பகவான் கண்ணன் தன் பகவத் கீதையில் உரைத்த போதும், தனக்கு உகந்த மாதமாக புரட்டாசியைக் கொண்டாடுகிறார், அந்த திருப்பதி மலை வாசன். புரட்டாசியில் விரதமிருந்தால் நம்மைப் புரட்டிப் போடும் சனி பகவானின் தாக்கம் இருக்காது. காரணம் சனிக்கிழமை தான் மலைவாசனின் உன்னத தினமாகும்.

இந்த புரட்டாசி சனிக்கிழமைக்கு இருக்கும் மகத்துவமே அலாதியானது. புரட்டாசி மாதம் விரதம் இருந்து மலையப்ப ஸ்வாமியை வழிபட் டால், செல்வ வளம் பெருகும். உன்னத பக்திக்கு உறுதுணை நிற்பது உயர்மலை பெரு மாள், நம் வெங்கடேசப் பெருமாள்.

தூயச் சிந்தனையோடு நேய பக்தியோடு சிறு துளசியை யிட்டு வழிபடுவோரை, அவன் ஏழையாக இருந் தாலும் அவனுக்கு

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



‘வைகுண்ட பிரவேசத்தை’ அளிப்பார் என்பது திண்ணம். இதற்கு ஒரு உண்மை சம்பவத்தை நாம் காணலாம்.

பீமய்யா என்ற ஒரு குயவன் வாழ்ந்து வந்தான். பிறப்பில் அவனுக்கு கால் ஊனம் ஏற்பட்டது. தனது குலத்தொழில் மண்பாண்டம் புனைதல். அதனையே அவனும் செய்து வந்தான். நேர்மை தவறாத பீமய்யா ஏழுமலையான் மீது அயராத பக்தி கொண்டிருந்தான்.

அவனுடைய பக்தியை மெச்சி திருமலையானும் அவனது கனவில் தன் திவ்ய சொரூபத்தைக் காட்டிக் கொடுத்தார். ஆம் அதுதான் புரட்டாசி மாதம் சனிக்கிழமை விடியற் காலை நேரம்.

பீமய்யாவும், தனது சொப்பன உருவில் கண்ட திருமாலின் வடிவத்தை அப்படியே, தான் பானை உருவாக்கும் மண்ணிலேயே வடிவமைத்தான். அதற்கு தன்னால் இயன்ற மலர்களை இட்டு பூசிக்கவும் செய்தான்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில்தவறா மல் விரதம் அனுஷ்டித்து வந்த பீமய்யன், பக்தி யில் மெய் மறந்தான். இங்ஙனம் பெரு மாளின் சிந்தனையில் தன் தொழிலையும் செய்து வந்தான். ஒரு சமயம் பானை செய்து கொண்டிருக்கும் போது, கண்மூடி ஆழ்ந்த தியான நிலைக்குச் சென்று விட்டான். அந்தச் சமயங்களில் தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் பானைக்காகப் பிசைந்து கொண்டிருக்கும் களிமண்ணையே மலர்களாக பாவித்து பெருமானுக்கு அர்ச்சனை செய்தான்.

அந்தக் காலக்கட்டத்தில் திருமலையை ஆண்ட அரசன் தொண்டைமானும், பெருமாளின் தீவிர பக்தன், பெருமாளுக்கு ஒரு ஆலயம் அமைத்து ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் தங்கப் பூமாலை அணிவித்து வந்தான்.

மறுவாரம் தங்கப்பூமாலையோடு மன்னவன் வந்து பார்த்த போது, பெருமாள் கழுத்தில் தான் அணிவித்த தங்க மாலைக்குப் பதிலாக களி மண்ணால் ஆன மலர் மாலை இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். அர்ச்சகரிடம் கேட்டான். அவருக்கும் அது விளங்கவில்லை. மன்னரிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

ஒருநாள் பூஜையின் பொழுது பொன் மலர் களுக்கு மத்தியில் ஒரு மண் மலரும் வந்து விழுந்தது. அதனால் மேலும் சங்கடத்திற்கு ஆளானான் மன்னன். தனது வழிபாட்டில் ஏதேனும் குறை இருக்குமோ என்று மனதிற்குள் வருந்தினான்.



இங்ஙனம் குழப்பத்தில் இருந்த தொண்டைமான், ஒருநாள் அபூர்வக் கனவினைக் கண்டான். அதில் திருமலை எம்பெருமான் வேங்கடநாதன் தோன்றி, ‘தனது பக்தன் பீமய்யன் செய்யும் பூஜையையே நீயும் சென்று பார்! உண்மை விளக்கும்’ என்று கூறி மறைந்தார்.

மறுநாள் மன்னவன் தொண்டைமான், திருமால் குறிப்பிட்ட அந்த குயவன் பீமய்யன் குடிசைக்கு சென்று மறைந்திருந்து அவன் செய்யப் போகும் பூஜையை கவனித்தான். அவன் மண் மலர்களால் அர்ச்சனை செய்ததைக் கண்ட மன்னன், அந்தக் குயவனை ஆரத்தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டான். “ஆஹா! உன்னுடைய பக்தி எத்தனை உயர்ந்த பக்தி! உனது வழிபாட்டைத் திருமால் மனம் விரும்பி ஏற்றுக் கொண்டார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்” என்றார். பீமய்யன் ஏதும் விளங்காமல் விழித்தான்.



இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பீமய்யன் கனவில் பெருமாள் மீண்டும் தோன்றினார். அதைக் கண்ட குயவன் தனது அங்கம் சிலிர்த்துப் போனான். அப்போது பெருமான், "உன் பக்தியின் சிறப்பையையும் பெருமையையும், என்று பிறர்கூற நீ அறிகின்றாயோ, அன்றே உனக்கு முக்தி என்றும், அன்றே உன்னை நான் வைகுண்டத்திற்கு அழைத்துக் கொள்வேன்" என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

ஆகவே புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருந்து, ஏழுமலையானை மனம் உருகி வழிபட்டால், எல்லா செல்வமும், நிம்மதியும் கிடைக்கும் என்பது மட்டுமல்லாமல், முக்தியும் கிடைக்கும் என்பது உறுதி.

திருப்பதி வெங்கடாசலபதிப் பெருமாளைப் புரட்டாசிசனிக்கிழமைகளில் வணங்குவது பெரும் புண்ணியம். முடிந்தவர்கள் திருப்பதிக்கே சென்று ஏழுமலையானை வணங்கலாம். திருப்பதிக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டில் வெங்கடாசலபதி திருவுருப் படத்தை வைத்தும் வணங்கலாம்.

புரட்டாசி சனிக்கிழமை, பூஜைக்குரிய பொருட்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். திருமலை வெங்கடேசப் பெருமாளின் படம் ஒன்றை வைத்து மாலை போட்டு வெங்கடேச அஷ்டகம் சொல்லிப் பூஜை செய்ய வேண்டும். சிலர் வெங்கடேசப் பெருமாளின் முகத்தை மட்டும் வைத்து பூஜை செய்வதுமுண்டு. துளசி இலைகளால் பெருமாளை அர்ச் சிப்பது மிகவும் உகந்தது.

புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் விரதம் இருப்பவர்கள் பெருமாளுக்கு சிலர் பலவகை உணவுகளை படைத்து வழிபாடுவார்கள். சர்க்கரைப் பொங்கல், புளி சாதம், மிளகு சாதம், தேங்காய் சாதம், தயிர்சாதம், எள்ளு சாதம், கொண்டைக்கடலை சுண்டல், உளுந்த வடை, மிளகு வடை என வகைவகையாக நைவேத்தியம் செய்வார்கள்.

"சனிக்கிழமைத் தளிகை" என்று சொல்வார்கள். இந்த படையலுக்கு செய்யும் உணவில் வெங்காயம், வெள்ளைப்பூண்டு சேர்க்க மாட்டார்கள். அன்று புலால் உணவும் செய்ய மாட்டார்கள். பெருமாளுக்கு தூய பச்சரிசி மாவினாலே விளக்கு செய்து அதில் நெய் விட்டு தீபமேற்ற வேண்டும். பெருமாள் படத்தின் முன்னர், இப்படி நெய் தீபம் ஏற்றுவதால் வறுமை நீங்கி, வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும்.



இளநகர் காஞ்சிநாதன்

பல கோடி சொத்துக்களின் அதிபதியாக இருக்கும் ஏழுமலையானுக்கு தினந்தோறும் கோடி கோடியாக உண்டியல் காணிக்கை சேருகிறது என்றாலும், அவருக்கு படையல் மண்பானையில் வைக்கப்படும் தயிர்சாதம் தான் இன்றும் நடைமுறையில் உள்ளது. மன்னன் கொடுத்த தங்கப் பூ மாலையை விட மண்ணால் குயவர் செய்த மாலையை அன்போடு ஏற்றுக்கொண்டவர் திருப்பதி ஏழுமலையான்.

**புதன் கிரகத்திற்குரிய மாதம்:** புரட்டாசி மாதம் ஒன்பது கோள்களில் ஒன்றான புதன்கிரகத்திற்கு உரியதாக பார்க்கப்படுகின்றது. புதனின், அதி தேவதையாக மகா விஷ்ணு உள்ளார். அதனால் புரட்டாசி மாத விரதமும், வழிபாடும் மகாவிஷ்ணுவின் அருளை பெற்று தரும்.

புதனின் வீடு கன்னி ராசியாகவும், அது பெருமாளின் அம்சமாக கருதப்படுகிறது.இந்த புரட்டாசி மாதத்தில் தான் கன்னி ராசியில் சூரியன் அமர்கிறார். அதனால் இந்த மாதத்தில் பெருமாளுக்கு பூஜை, வழிபாடு, பஜனை, பிரம்மோற்சவம் செய்யப்படுகிறது. சனி பகவானும், புதனும் நட்பு கிரகங்கள் என்பதால் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் மிக விஷேசமாகப் பார்க்கப்படுகின்றது.

புரட்டாசி மாதம் எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் கூறுகிறது. இதனால் இந்த மாதத்தில் நாம் பெருமாளை வழிபாடு செய்வதால் எமபயம் நீங்கி, நல் வாழ்க்கையை பெறலாம். புரட்டாசி மாதத்தில் வரும் திருவோணம் திதியில் திருப்பதி மலையப்ப சுவாமி தன்னை வெளிப்படுத்தி கொண்ட தினமாக பார்க்கப்படுகின்றது. அதே போல், சனிக்கிழமையில் தான், சனி பகவான் அவதரித்து, புரட்டாசி மாதத்திற்கு சிறப்பை கொடுத்தார்.

நாமும் புரட்டாசி விரதம் இருப்போம் புண்ணிய பலன் பெறுவோம்.

இளநகர் காஞ்சிநாதன்
சென்னை.
போன்: 9840955363

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# எண்ணங்கள் சுவையானால் இதயம் மாம்பழமாகிவிடும்

ஆண்டவனை ஆதரிக்கிறேன் என்று சொல்லாதே. அதை அவன் ஏற்பதில்லை. ஆண்டவனை பக்தி செய்கிறேன் என்று சொல். இதையே ஆண்டவன் ஏற்கிறான்.

❖ ❖ ❖

புத்தி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும். அது கல்வி கற்றால் தான் வளரும்; உயரும். இல்லையேல், அது பிறந்த மேனியில் அப்படியே இருக்கும். இந்த வண்ணம் இருக்காதீர்கள்.

❖ ❖ ❖

மனிதன் உயருவதற்கு நிறம் மாறுவான். ஓணான் மட்டும் நிறம் மாறாது; தவளையும் நிறம் மாறும்.

❖ ❖ ❖

நிலவொளியில் மறுநாள் வரும் சூரியனை நம்பி செடிகள் வளருகின்றன. அதுபோல் கடவுள் காட்சி தரமாட்டான் என்று எண்ணமே வேண்டாம். அனைவருக்கும்
கடவுளின் அருளும், பக்தியும் நிச்சயம் உண்டு.

❖ ❖ ❖

என்னுள்ளே உலகம் இருந்தால் என் பெயர் மேதை. உலகினுள்ளே நானிருந்தேன் என்றால் என் பெயர் மனிதன்.

❖ ❖ ❖

ஆண்டவனின் வயிற்றுக்குள் உன்னைப் பார். இது சமாதி ஆவதற்கு உண்டான தியானம்.

❖ ❖ ❖

மாட்டை சினைக்கு கொண்டு போய் விடுவதுபோல் மனித சமுதாயத்தை பக்தி மார்க்கத்தில் கொண்டு போய் விடுபவர்கள் யார்? அவ்வழியில் அவர்களே செல்ல வேண்டியதுதான்.

❖ ❖ ❖

கல்வியையும் அறி. உலக வாழ்க்கையையும் அறி. அப்பொழுதுதான் உலக முன்னேற்றம் என்றால் என்ன என்பதே புரியும்.



❖ ❖ ❖

குடும்ப வாழ்க்கை என்பது உலக வாழ்க்கை அல்ல. அப்பம் சுடும்பொழுது, இரண்டு பக்கத்தையும் பார்க்கலாம். சுயநலக்காரனையும் உலகம் அழைக்கிறது.

❖ ❖ ❖

நூல் நூற்பவனைப் போன்று, ஆண்டவனை ஜபம் செய்து கொண்டே இருந்தால் நூல் சேருவதைப் போன்று அருள்தானே வந்து சேரும்.

❖ ❖ ❖

நூல் நூற்றவன், திகம்பரனாய் வேட்டி இல்லாமல் திரிந்ததில்லை.

❖ ❖ ❖

டமாரம் அடித்தால் ஒலி கேட்காமல் போகுமா? கேட்கும். பக்தியுடன் "சிவ சிவ" என்று சொன்னால், உனது ஆத்மாவிலிருந்து ஒலியுடன் கேட்பதே கடவுளின் திருநாமம்.

❖ ❖ ❖

கோள்கள், கிரகங்கள் நிலை பெயருவது அவைகளின் விபரீத வேலையல்ல; இயற்கையான வேலையே. அதையொட்டி மனிதன் எப்படிச் செயல்பட்டாலும் சிந்தித்தாலும் அது மனிதனின் வேலையே அல்ல.

❖ ❖ ❖

கிரகப்பெயர்ச்சி நடக்கும் பொழுது அதில் உனக்கு எண்ணமிருந்தாலும், இல்லாவிட்டாலும் அச்சமயத்தில் ஆண்டவனைத் தொழுதுவிடு.

❖ ❖ ❖

பல தெய்வங்களை வைத்து வழிபடுவது, செத்த மீன்களை வைத்து வியாபாரம் செய்வதைப் போன்றது. உயிருடன் மீன்களை வாங்கி வளர்ப்பது, மனதினுள் ஆண்டவனைப் பார்ப்பதைப் போன்றதே.

❖ ❖ ❖




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

www.aanmeegamalar.com


காலம் சரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. மனிதனுக்கு இதனை கணித்தாலும், கணிக்காவிட்டாலும் என்ன லாபம்? இப்படி பல பொருள்களால் மனிதனுக்கு லாபமில்லை. இதை உடனடியாய்ச் சிந்தித்தால், மனிதன் வீணாக்கும் காலத்தை உடனடியாய்க் குறைப்பான்.

❖ ❖ ❖

அல்லி இரவில் மலரும். இதற்கு சூரிய ஒளி தேவையில்லை. ‘கடவுள் வேண்டாம். அவன் இல்லாமலே நான் மகிழ்வில் மலர்வேன்’. இப்படி நீ சொல்ல முடியாது. ஜீவன் முக்தனே சொல்வான்.

❖ ❖ ❖

மனித இதயம் மாம்பழம் போன்று சுவையானதாய் இருக்க வேண்டும். எண்ணங்கள் சுவையானதாய் அமைந்துவிட்டால், இதயம் மாம்பழமாகிவிடும்.

❖ ❖ ❖

சிந்தனை செய்ய முடியாதவர்களுக்கு, சிந்தனை செய்ய உச்சவரம்பே கிடையாது. ஆனால் சிந்தனை செய்யத் தெரிந்தவர்களுக்கு உச்சவரம்பு உண்டு. தவறாய் சிந்திக்காமல் இருப்பதற்கே, இந்த உச்சவரம்பு.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்


❖ ❖ ❖

பூஜை செய்வதற்கு உச்சவரம்பு இல்லை. அதனால் எவ்வளவு வேண்டுமானாலும் பூஜை செய்யலாம்.

❖ ❖ ❖

ஒரு முறை புத்திசாலியாய் இருந்துவிட்டால் எப்பொழுதும் அப்படியே இருப்பாய். நீ இப்படியா... என்று உறுதி செய்.

❖ ❖ ❖

மனதில் பக்தி முளைத்துவிட்டால், உலகில் ஆண்டவன் தோன்றிவிடுவான்.

❖ ❖ ❖

ஆசைகள், வாழ்க்கையெனும் பாதையில் வழியில் கிடக்கின்ற உடைத்துப் போட்ட பெரிய சிறிய கற்களே. இவைகளைச் சமன் செய்து சாலையமைத்தால் தான் வாழ்க்கை சுகமாக இருக்கும்.

❖ ❖ ❖

எது கரடு முரடான பாதை என்பதைக் கண்டு பிடிப்பவனே மனிதனில் மேதை.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

# இணையதளத்தை பார்க்கவும்























# யானையும் ஈசலும்வணங்கிய வைகல் நாதர் ஆலயம்

கும்பகோணம் காரைக்கால் பேருந்து வழித் தடத்தில் திருநீலக்குடி தாண்டி, பழியஞ்சிய நல் லூர் கூட்ரோடு என்னுமிடத்தில் வலப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் திரும்பி பழியஞ் சிய நல்லூரை அடைந்து, மேலும் 2 கி.மீ. அதே சாலையில் சென்றால் வைகல் கிராமத்தை அடையலாம்.

கும்பகோணத்தில் இருந்து கிழக்கே சுமார் 12 கி.மி. தொலைவிலும், கொல்லுமாங்குடிக்கு மேற்கே சுமார் 20 கி.மி. தொலைவிலும் உள்ளது. திருநீலக்குடி என்ற மற்றொரு சிவஸ்தலம் இங்கிருந்து 3 கி.மி. தொலைவில் உள்ளது.

இத்தலத்து இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

வைகல் என்ற இந்த சிறிய கிராமத்தில் 3 சிவாலயங்கள் சிவபெருமானின் நெற்றிக்கண் போல விளங்குகிறது.

மூன்று திருக்கோயிலுமே பிரம்மா, விஷ்ணு, லட்சுமி, அகத்தியர் ஆகியோர் வழிபட்ட தல மாகும். இக்கோயில் கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்றாகும்.

கேட்டதெல்லாம் கொடுக்கும் இறைவன்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென் கரைத்தலங்களில் இது 33வது தலம்.

தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 96 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவர் திருப்பெயர்: வைகல் நாதர், சண்பகா ரண்யேசுவரர், இறைவியார் திருப்பெயர் : வைகல் நாயகி, வைகலாம்பிகை, சாகாகோமளவல்லி, கொம்பியல் கோதை.

தேவாரப் பாடல்கள் :திருஞானசம்பந்தர்,

திருஞானசம்பந்தர் பாடல்

துளமதி யுடைமறி
தோன்று கையினர்
இளமதி யணிசடை
எந்தை யாரிடம்










உளமதி யுடையவர்
வைக லோங்கிய
வளமதி தடவிய
மாடக் கோயிலே.

தலவரலாறு

முன்னொரு காலத்தில் பூமி தேவி, தன்னை விரும்பி மணம் செய்து கொள்ளுமாறு திருமாலை வேண்டினாள். இவளது வேண்டுகோளை ஏற்ற பெருமாள் பூமிதேவியை திருமணம் செய்து கொண்டார். இதனால் மகாலட்சுமிக்கு பெருமாள் மீதுகோபம் ஏற்பட்டது. எனவே லட்சுமி தேவி செண்பகவனம் எனும் இத்தலத்தை அடைந்து கடும் தவம் செய்தாள். பெருமாளும், பூமி தேவி யும் பிரிந்து போன லட்சுமியை காண இத்தலம் வந்தனர். இவர்களை தேடி வந்த பிரம்மனும் இத்தல இறைவனை வழிபட்டார். சிவனின் திருவருளால் பெருமாள் லட்சுமி, பூமாதேவி இருவரையும் மனைவியராகப்பெற்றார்.

வைகல் என்ற இந்த சிறிய கிராமத்தில் 3 சிவாலயங்கள் இருக்கின்றன.

1. ஊரின் தென்புறமுள்ள திருமால் வழிபட்ட விசுவநாதர் ஆலயம், வலக்கண் போல ஊரின் தென்பால் விளங்குகிறது.

2. பிரம்மன் வழிபட்ட பிரம்மபுரீசுவரர் ஆலயம், இடக்கண் போலத் திகழ்கிறது.

3. ஊரின் மேற்கு திசையிலுள்ள வைகல் நாதர் ஆலயம். இதுவே மாடக்கோயில். இது சிவபெருமானின் நெற்றிக்கண் போல விளங்கு கிறது. இதுவே தேவாரப் பதிகம் பெற்றது.

இவ்வூரிலுள்ள மற்ற இரண்டு ஆலயங்களும் திருமால், பிரம்மா, திருமகள் ஆகியோராலும், இந்திரன் முதலான தேவர்களாலும், அகத்தியர் போன்ற முனிவர்களாலும் வழிபட்ட கோயில் களாகும்.

வலக்கண்ணாக விசாலாட்சி உடனாகிய விஸ்வநாதர் கோயில், இடக்கண்ணாகபெரிய நாயகி சமேத பிரமபுரீஸ்வரர் கோயில், நெற்றிக் கண்ணாக கொம்பியல் கோதை உடனாகிய வைகல் நாதர் திருக்கோயில். இந்த மூன்று திருக்கோயிலுமே பிரம்மா, விஷ்ணு, லட்சுமி, அகத்தியர் ஆகியோர் வழிபட்ட தலமாகும்.


சிவத்திரு.குமரேசன்

தன் குட்டியை தேடி வருந்திய யானை, தனது தந்தத்தால் இங்கிருந்த ஈசல் புற்றை காலால் மிதித்து சேதப்படுத்தியது. தன் புற்றினை மிதித்து அழித்த யானையின் உடலை ஈசல் கடித்து கொன்றன. தங்கள் தவறை

உணர்ந்த யானைக்குட்டியும், ஈசலும் இத்தல இறைவனை வழிபட்டு அருள் பெற்றன என புராணம் கூறு கிறது.

இவ்வாலயத்திற்கு இராஜகோபுரம் இல்லை. கிழக்கில் ஒரு நுழைவாயில் மட்டும் உள்ளது. தெற்கு வெளிப் பிரகாரத்தில் உள்ள படிகள் மூலம் ஏறி மாடக்கோவிலின் முன்புற மேடையை அணுகலாம்.

முன்புற மேடையில் இறைவன் சந்நிதியை நோக்கி நந்தி மண்டபம் உள்ளது. மாடக்கோவிலின் உள்ளே இறைவன் வைகல் நாதர் கிழக்கு நோக்கிய சந்நிதியில் அருட்காட்சி தருகிறார். வலதுபுறம் தெற்கு நோக்கிய இறைவி கொம்பியல்கோதையின் சந்நிதி அமைந்துள்ளது. வள்ளி தெய்வானை சமேத முருகர், ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணு ஆகியோர் சந்நிதிகளும் ஆலயத்தில் உள்ளன.

காகவாகனர் சனீஸ்வரருக்கும் தனி சந்நிதி உள்ளது. வாயிலைக் கடந்து உள்ளே செல்லும்போது வலப்புறம் விநாயகர் உள்ளார். வெளி திருச்சுற்றில் வலப்புறம் அம்மன் சன்னதி யும், இடப்புறம் சண்டிகேஸ்வரர் சன்னதியும் உள்ளன.

காலபைரவரும், சனி பகவானும் உள்ளனர். கோயில் சற்று உயர்ந்த தளத்தில் உள்ளது. மூலவருக்கு எதிராக நந்தி, பலிபீடம் காணப் படுகிறது. வெளியே வலப்புறம் விநாயகர் உள் ளார். மூலவருக்கு முன்பாக நந்தி உள்ளது.

கருவறை கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி மட்டும் உள்ளார். திருச்சுற்றில் விநாயகர் சன்னதி, வள்ளி தெய்வானையுடன் கூடிய முரு கன் சன்னதி, ஸ்ரீதேவி பூதேவியுடன் கூடிய பெருமாள் சன்னதி, கஜலட்சுமி சன்னதி ஆகிய சன்னதிகள் உள்ளன..

– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி, சென்னை,
போன்: 919003296221

easanaithedi.in

# சிவபூஜைக்குரிய மலர்களும் பலன்கள்

**செந்தாமரை**

தனலாபம், வியாபார விருத்தி, ஆயுள் விருத்தி

**மனோரஞ்சிதம், பாரிஜாதம்**

பக்தி, தம்பதி ஒற்றுமை, ஆயுள்விருத்தி

**வெண்தாமரை, நந்தியாவட்டை, மல்லிகை, இருவாட்சி**

மனச்சஞ்சலம் நீங்கி, புத்திக்கூர்மை ஏற்படும். சகலகலாவிருத்தி.

**மாசிப்பச்சை, மரிக்கொழுந்து**

நல்ல விவேகம், சுகபோகங்கள், உறவினர் ஒற்றுமை உண்டாகும்.

**மஞ்சள் அரளி, தங்க அரளி, செவ்வந்தி**

கடன் நீங்கும் கன்னியருக்கு திருமண பாக்கியம் ஏற்படும்.

**செம்பருத்தி, அடுக்கு அரளி**

புகழ், தொழில் விருத்தி.

**நீலச்சங்கு**

அவச்சொல், அபாண்டம், தரித்திரம் நீங்கும் அருளும் ஆயுளும் கிட்டும்.

**வில்வம் கருந்துளசி, மகிழம்பூ**

சங்கடங்கள் நீங்கி, சகலகாரியமும் கைக்கூடும்.

தாமரை, செண்பகம் ஆகியவற்றை மொட்டுகளாகவும் பூஜை செய்யலாம். ஏனையவை மலர்ந்திருக்க வேண்டும். குங்குமப்பூ தவிர மற்ற முள் உள்ள பூக்கள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

கிளுவை, விளா, வெண்நொச்சி, மாவி லங்கை, வில்வம் ஆகியவை பஞ்ச வில்வங் களாகும்.

மாதப்பிறப்பு, சோம வாரம், அமா வாசை, பவுர்ணமி, சதுர்த்தி, சதுர்த்தசி, அஷ்டமி, நவமி நாள்களில் வில்வத்தை மரத்திலிருந்து பறிக்க கூடாது.





# வெற்றிலைபாக்கை பயன்படுத்தினால்

## பல மருத்துவமனைகளை தேவையின்றி மூடிவிடலாம்

தமிழ் கலாச்சாரம் என்பது உடலுடன் மனதையும் சீர்படுத்தும் வகையில் அமைந்தது, ஆனால் ஒருசில புல்லுருவிகள் நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் சீரழித்துக் கொண்டிருப்பது வேதனையிலும் வேதனை.

உணவுக் கலாச்சாரத்தில் உலகத்திற்கே குருவாக விளங்கவேண்டிய தமிழ் கலாச்சாரத்தை போதைக்கும், சாராயத்திற்கும் அடிமைப்படுத்தி, கண்ட குப்பைகளை உணவாக்கி மாற்றியுள்ளனர் இடையுல் புகுந்த வெளிநாட்டு அந்நிய சக்திகள்.

குறிப்பாக நமது இளைய தலைமுறையை கெடுப்பதற்காகவே, நமது தமிழ் கலாச்சாரமும் பண்பாடும் திட்டமிட்டு கெடுக்கப்பட்டு வந்துள்ளது.

நம் உணவில் மிக முக்கியப் பங்காற்றிய வெற்றிலையைப் பற்றி பல்வேறு புரளிகளை கிளப்பி, இன்று வெற்றிலை பாக்கு போடுவதையே அடியோடு அழித்துவிட்டது திருட்டுக் கூட்டங்கள்.

உண்மையில் வெற்றிலைப் பாக்கு என்ற தாம்பூலத்தை தமிழர்கள் என்று கடைபிடிக்காமல் விட்டனரோ, அன்றிலிருந்து பல்வேறு சிறு சிறு உடல் நலப் பிரச்சனை தோன்றி மனித இனத்திற்கே பல்வேறு ஊறுகளை விளைவித்த வண்ணம் உள்ளது.

தமிழ்க் கலாச்சாரத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது "தாம்பூலம்" எனப்படும் வெற்றிலை, பாக்கு. தமிழனின் பிறப்பு முதல் இறப்பு வரை



உள்ள அனைத்து சடங்கு சம்பிரதாயங்களிலும் தவறாமல் இடம் பெறும் ஒரு பொருள் வெற்றிலை பாக்கு,வெறும் வெற்றிலைபாக்கு மட்டுமே மாற்றி ஒரு திருமணத்தையே நிச்சயம் செய்து விடுவான் தமிழன்.

**வெற்றிலை பாக்கு போட்டு வளர்ந்த தாத்தா பாட்டி காலத்தில்....**
**கேன்சர் இல்லை, சர்க்கரைவியாதி இல்லை, இதய நோய்கள் இல்லை.....**
**முக்கியமாக மலட்டுத்தன்மை அறவே இல்லை.**

ஆக வெற்றிலை, பாக்கு என்பதுபலநோய் களைத் தீர்க்கும் ஒரு அருமருந்து என்பது தமிழினத்துக்கு தெரிந்திருந்ததால் தான், அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக் கிறான் தமிழன்.

கலாச்சாரச் சீரழிவும், அன்னிய மோகமும் சேர்ந்து தாம்பூலத்தைக் கெட்ட பழக்கமாக சித்தரித்து நம் இனத்தை நோயாளிகளாய் அலைய விட்டிருக்கிறது. வெற்றிலையின் மகத் துவத்தை தமிழனை மறக்கடிக்கச் செய்து தம்பதிகளை fertility Centre (கருத்தரிப்பு மையம்) களை நோக்கி படையெடுக்க வைத்திருக்கிறது.

வாயில் கேன்சர் வந்திடும், பல்லு கரை போகவே போகாது, தவிர "டேய்.. இன்னும் பழைய ஆள் மாதிரி வெத்தலையை போட்டுக்கிட்டு", எனச் சொல்லிச் சொல்லியே வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் நம்மிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைக்கப்பட்டு விட்டது.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு அதிலும் கல் சுண்ணாம்பு, முத்துச்சிப்பி சுண் ணாம்பு என வித்தியாசம் காட்டி அது மட்டுமா ஏலக்காய், கிராம்பு, சாதிக்காய், என வாசனைப் பொருட்கள் கலந்து வாயில் இட்டு சுவைத்து, முதலில் ஊறும் நீரும், இரண்டாவது ஊறும் நீரையும் துப்பிவிட வேண்டும் என்றும், மூன்றவதாய்ஊறும் நீரே அமிர்தம் என தாம்பூலம் இட்ட வழி முறைகள் சொன்ன சித்த மருத்துவம்இருந்த ஊரில், "தாம்பூலமா அப்படின்னா?", எனக் கேட்கும் அடுத்த தலைமுறை வந்து விட்டது.

பெருகி வரும் ஆண் மலட்டுத் தன்மை குறிப்பாக விந்தணு உற்பத்தி மற்றும் அதன் Motility குறைதல் இவற்றுக்கு தாம்பூலம் மிக சிறந்த மருந்து.

வெற்றிலையில் உள்ள Hydroxy Chavicol எனும் Phenol Compound ஆனது ஆண்களின் Prostate-ஐ வலுப்படுத்துகிறது, மேலும் Prostate புற்று வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது, விதைப்பையில் உற்பத்தியாகும் விந்தணுவிற்கு Prostateல் இருந்து சுரக்கும் நீரில் உள்ள Zinc மூலம் தான் உயிரே கிடைக்கிறது, அதாவது Motility உண்டாகிறது, IVF நிகழ்வில் விந்தின் Capacitation நிகழ்வும் முக்கியம், அந்த Capacitation நடக்க Prostate சுரப்பு ரொம்ப முக்கியம், இதையெல்லாம் தெரிந்ததால் தானோ என்னவோ திருமண வீட்டில் மிக முக்கியப் பங்காற்றும் ஒரு தோழனாகவே வெற்றிலை பாக்கு திகழ்ந்தது, குறிப்பாக திருமணமான ஆண் பெண் அவசியம் சாப்பிட்ட பின் தாம்பூலம் (வெற்றிலை பாக்கு) எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முன்னோர்கள் வற்புறுத்தினர். இதைச் சடங்காகவும் மனைவி கணவனுக்கு தாம்பூலத் தை ஊட்டி விடும் சடங்கையும் வைத்து சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள் நமது முன் னோர்கள்.

மலச்சிக்கலா, தாம்பூலத்துடன் கொஞ்சம் அதிகம் பாக்கைச் சேர், வாய் நாற்றமா, லவங்கத்தைச் சேர், வீரியம் வேண்டுமா, சாதிக் காய் சேர் எனச் சொன்ன தமிழ்ச் சமூகம் இன்று Infertility center-களில் முடங்கி கிடக்கிறது.

அடுத்த தலைமுறைக்கு இனியாவது தாம்பூலத்தின் மகத்துவத்தை புரியவைத்து, அவர்கள் வாழ்க்கையை வசந்தமாக்க முயற்சி செய்வோம்.






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள


**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

49

நாம் தூரத்தில் தெரியும் கயிற்றை பாம்பு என்று எண்ணிக்கொள்கிறோம். தூரத்தில் இருக்கும்போது கயிற்றை பாம்பு என்று நினைத்து அருகில் சென்று பார்த்தவுடன் பாம்பு இல்லை என்று தெரிந்து கொள்கிறோம். கயிறு தரையில் பாம்பு போன்று வளைந்து கிடப்பது உண்மை. அதனை பாம்பு என்று நாம் நினைப்பது உண்மை. அதுபோல்தான் காரண சரீரம் 'இருக்கு' என்றும் சொல்ல முடியாது. 'இல்லை' என்றும் சொல்ல முடியாது. கயிற்றை அருகில் சென்று பார்த்து பாம்பு இல்லை என்று தெளிவு பெற்றோம். அதேபோன்று காரண சரீரம் 'இல்லை' என்று உறுதியாகக் கூறமுடியாது. மனிதன் ஆழ்ந்து சிந்தித்து ஞானம் பெற்றவுடன் காரண சரீரம் 'இருக்கு' என்ற முடிவுக்கு வரமுடியும்.

நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது காரண சரீரம் ஆகும். நாம் உறக்கத்தில் இருக்கும்போது காலம் தெரியாது. ஆனால் செயல்பாடுகள் காட்சிகள் இருக்கும். செயல்பாடுகள் காட்சிகள் எப்படி இருக்கும் என்றால் கனவுகளின் மூலம் உணரலாம். கனவில் நமது ஸ்தூல உடல் அசைவற்று இருக்கும். கனவில் விழிப்புநிலையில் இருக்கும்போது நமது செயல்பாடுகள் எப்படியெல்லாம் இருக்குமோ அதுபோல்தான் கனவில் காட்சிகள் செயல்கள் எல்லாம் காண்போம்.

காரணம் இல்லாமல் காரியம் ஏற்படுவதில்லை. காரணத்தில் இருக்கக்கூடிய தன்மைகள்தான் காரியத்தில் இருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு மண்பானையை எடுத்துக் கொள்வோம். இங்கு பானை என்பது காரியம். இந்தப்பானை உருவாவதற்கு காரணமாக இருப்பது களிமண் ஆகும். எனவே பானை என்ற பொருள் அல்லது காரியம் உருவாவதற்கு காரணமாக இருப்பது களிமண் என்பது நமக்குத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது காரியத்தின் தன்மையை வைத்து காரணத்தை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக ஒரு தங்க நகையை எடுத்துக் கொள்வோம். நகை என்பது காரியம். அதற்கு காரணமாக இருந்தது தங்கம் என்று அனைவருக்கும் தெரியும்.

சாங்கிய தத்துவப்படி மனிதனின் மூன்று குணங்கள் சாத்வீக, தாமச மற்றும் ரஜோ என குறிப்பிடப்படுகிறது. மன அடக்கம், புலனடக்கம், சகிப்புத்தன்மை, விவேகம் இரக்கம், கருணை, வாய்மை, தானம் செய்தல், இறை நம்பிக்கை, இறைவனிடம் பூர்ண சரணாகதி, விட்டுக்கொடுக்கும் தன்மை போன்றவை சாத்வீக குணம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ரஜோ குணம் உள்ளவர்களின் குணங்கள் ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம் ஆசை, திமிர், இறைவனிடம் சுயநலத்துடன் வேண்டுவது, புலனின்பத்தில் மிகுந்த



பற்று, சண்டைசச்சரவுகளில் உற்சாகம் காட்டுதல், புகழ் போதையில் மயங்குதல், பிறர் மனம் புண்படும்படி பேசுதல், பயன் கருதி செயல்படுதல் போன்றவை ராஜச குணமாகும்.

தாமச குணம் உள்ளவர்கள் காமம், கோபம், பேராசை, பொய் பேசுதல் பிறர் மனம் புண்படும்படி பேசுதல், உயிர்களைத் துன்புறுத்துதல், கலகம் செய்தல், உறக்கம் சோம்பல், காரணமில்லாமல் பிறரிடம் பொருட்களை எதிர்பார்த்தல், பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுதல், மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக பகட்டுக்காக செய்யப்படும் செயல்கள், நல்லவன்போல் மற்றவர்களிடம் நடித்தல் தாமச குணமாகும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

சாத்வீக குணமுடையவன் இறை சிந்தனையுடன் இருப்பான். தான் செய்யக்கூடிய தானதர்ம பலன்களை எல்லாம் கடவுளுக்கு அர்ப்பணித்து விடுவான். பகவத்கீதையில் குறிப்பிட்டுள்ளபடி கடமையைச்செய் பலனை எதிர்பார்க்காதே என்பதை தன்னோட வாழ்வில் சாத்வீக குணமுடையவன் தவறாமல் கடைபிடிப்பான்.

நமது மனம் தாமச, ராஜச, சத்துவ என மூன்று குணங்களாக இருக்கிறது. இதே தன்மைகள்தான் காரண சரீரத்திலும் இருக்கும். உலகில் பிறந்த அனைவருக்கும் 'நான் யார்?' என்பது தெரிவதில்லை. மனிதன் நான் என்பதை இந்த ஸ்தூல உடலைத்தான் அவன் நினைக்கிறான். மனிதனுக்கு ஞானம் வந்த பிறகுதான் 'நான்' என்பது ஆத்மா பரம்பொருள் எனத் தெரிகிறது. ஞானிகளால் மட்டும் ஆத்மா பற்றி அறிந்து கொள்ள முடியும். 'நான் யார்?' என்பது பற்றி ஞானிகளால் மட்டும் அறிந்து கொள்ள முடியும். நாம் ஆன்மீக வழியில் சென்று தகுந்த குருவின் துணையோடு பரம்பொருள் ஆத்மாவை பற்றி அறிந்து கொள்ள முடியும். பரம்பொருள், ஆத்மாவைப் பற்றி அறிந்துகொள்வதற்கு ஆர்வப்படுபவர்கள் மட்டும், ஞானிகள் மூலம் அறிந்து கொள்ள முடியும். இந்த 'நான் யார்?' என்ற ஞானம் வரப்பெற்றால் நமது மனம் இயல்பாக அமைதியில் ஆழ்ந்து விடும்.

சூக்ம சரீரம், காரண சரீரத்தில் 'நான் யார்?' என்பது பற்றி அறிந்து கொள்ளமுடியாமல் நமக்குள்


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

அறியாமை என்னும் இருள் சூழ்ந்து இருக்கிறது. ஆத்மா பற்றி அறிந்து கொள்ளமுடியாமல் காரண சரீரத்துக்குள் அறியாமை இருக்கிறது.

காரணம் இல்லாமல் காரியம் ஏற்படுவதில்லை. எனவே காரியத்தை வைத்து காரண சரீரத்தின் தன்மை எத்தகையது என்பதை அறிந்து கொள்ள முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இதுபோன்ற சாஸ்திர சம்பிரதாயங்கள் பற்றி நாம் ஆழ்ந்து படிக்கும்போது அல்லது கேட்கும்போது சிந்தனையில் ஈடுபடும்போது துன்பங்களை மறந்து நமது மனம் ஓரளவுக்கு அமைதி பெறுகிறது. ஆன்மீக ஞானிகள் கூறும் தத்துவங்களை நன்கு புரிந்துகொண்டு அதனை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு கடைபிடிக்கும்போது தத்துவங்களை தவறாக புரிந்து கொண்டு செய்யல்புரியும்போது துன்பத்துக்கு ஆளாக நேரிடும்.

இதனை ராமகிருஷ்ணர் ஒரு கதைமூலம் விளக்கியுள்ளார். குரு தனது சீடர்களிடம் உலகில் காணும் உயிர்கள் அனைத்தையும் பகவான் நாராயணனாக நீங்கள் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கும்போது உங்களுக்கு துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்கும் என்று கூறினார். இதனை தவறாகப் புரிந்து கொண்ட சீடன் ஒருவன் தெருவில் நடந்து சென்று கொண்டிருக்கும்போது எதிரே மதம் கொண்ட யானை ஓடி வந்து கொண்டிருந்தது. அதனைப் பார்த்த சீடன் நமது குரு அனைத்து உயிர்களையும் பகவான் அம்சமாகப் பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதனால் இந்த மதம் கொண்ட யானை தன்னை ஒன்றும் செய்யாது என நினைத்து ஓடாமல் நின்று கொண்டிருந்தான். யானையின் மீது இருந்த பாகன் யானைக்கு மதம் பிடித்து விட்டது எல்லாரும் விலகி ஓடி விடுங்கள் என்று குரல் கொடுத்துக்கொண்டே இருந்தான்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

யானையை நான் நாராயணன் ஆகப் பார்க்கிறேன். நாராயணன் நம்மை ஒன்று செய்ய மாட்டான் என்று சீடன் எண்ணிகொண்டு யானை வருவதைப்பற்றி கவலைப்படாமல் நின்றான். மதம் கொண்ட யானை அவனைத் தூக்கி எறிந்து விட்டு சென்று விடுகிறது மற்ற சீடர்கள் மூர்ச்சையாகி உள்ள சீடனை தூக்கிக்கொண்டு குருவிடம் கொண்டு சேர்த்தார்கள். அவன் மூர்ச்சை தெளிந்து சீடன் குருவைப் பார்த்து கூறினான். குருவே தாங்கள் எல்லா உயிர்களையும் நாராயணன் என்று பார்க்கும்படி கூறினீர்கள். அதனால்தான் நான் யானையை பகவான் நாராயணன் என்று நினைத்து பயமில்லாமல் நின்று விட்டேன்.



குரு அந்த சீடனைப் பார்த்து நான் சரியாகத்தான் கூறினேன். நீதான் தவறாகப் புரிந்துகொண்டு இன்னலுக்கு ஆளாகி விட்டாய். சீடனே எல்லா உயிரையும் நீ நாராயணன் என்று பாவித்தவன் யானையின் மீது இருந்த யானைப் பாகனை நாராயணன் என்று ஏன் பாவிக்கவில்லை. நீ யானைப்பாகனையும் நாராயணன் என்று பாவித்திருந்தால் அவன் விலகி ஓடுங்கள் என்று கூறியதைக் கேட்டு விலகி ஓடி இருப்பாய் என்று குரு தவறாக புரிந்துகொண்ட சீடனுக்கு தெளிவுபடுத்தினார். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி:
9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசக அன்பர்கள்

## விருப்ப சந்தா செலுத்தலாம்

**எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.**

விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள்
UPI & வங்கி எண் வாயிலாகவும்
சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)